20 JAN 1999
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14வள்ளுவர் ஆண்டு 2030 தை 06 புதன்கிழமை (20-01-1999) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 46

## ஜே.வி.பி. தேர்தல் கூட்டம் அடித்துக் குழப்பப்பட்டது

### 11 பேருக்குப் படுகாயம்

கொழும்பு, ஜன. 20

வடமேல் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஜே. வி. பி. வேட்பாளர்களுக்கு ஆதரவு கோரி குளியாப்பிட்டித் தொகுதியில் பன்விலை நகரில் நேற்று மாலை 4-30 மணியளவில் நடந்த பொதுக் கூட்டம் இனந் தெரியாதவர்களால் தாக்கப்பட்டது.

இத்தாக்குதலில் படுகாயம் அடைந்த 11 பேர் அபாயகரமான கட்டத்தில் பன்விலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

பொதுக் கூட்டம் நடந்த போது அங்கு வந்த இனந் தெரியாதகுழு மேடையையும் அங்கு வைக்கப்பட்டிருந்த சுவரொட்டிகளையும் தீயிட்டுக் கொளுத்தியதுடன் அங்கு இருந்தவர்களையும் தாக்கிய தாகக் கூறப்பட்டது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக அரசு ஆதரவாளர் ஒருவரைப் பொலீஸார் கைது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 9 வருட அஞ்ஞாதவாசத்தின் பின் திரும்பிய வரதராஜப்பெருமாளின் வருகையால் ஈ.பி.ஆர்.எல்.எவ்வில் பிளவு ஏற்படும்?

கொழும்பு, ஜன. 20

ஈ. பி. ஆர். எல். எவ். பிரமுகரும், வடக்கு - கிழக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சருமான வரதராஜப்பெருமாள் திடீரென இலங்கை திரும்பியிருப்பது அக்கட்சிக்குள் பிளவு நிலையை ஏற்படுத்தும் சூழ்நிலை ஒன்றை உருவாக்கியிருப்பதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்திய அமைதிப் படை இலங்கையில் இருந்து 1990 முற்பகுதியில் வெளியேறிய போது அவர்களுடன் புறப்பட்டுச் சென்ற வரதராஜப் பெருமாள் இந்தியாவில் ஒன்பது வருட கால அஞ்ஞாதவாசத்தை முடித்துக் கொண்டு கடந்த சனியன்று திடீரென கொழும்பு திரும்பினார்.

அவர் கொழும்பு திரும்பியதால் அதிருப்தியுற்ற ஈ. பி. ஆர். எல். எவ். தலைமைப் பீடம் அவரது கொழும்பு வருகையை மூடி மறைத்து மழுப்ப முயன்றது.

திங்கள் நள்ளிரவு வரை அவர் இலங்கை திரும்பவில்லை என்ற நிலைப்பாட்டையே ஈ.பி.ஆர்.எல். எவ் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் யாழ். மாவட்ட அமைப்பாளர் சுபத்திரன் (றொபேர்ட்) உட்பட ஏனையோர் பத்திரிகைகளுக்கு வலியுறுத்தி வந்தனர்.

ஆனால் இலங்கை—இந்திய செய்தியாளர்கள் வரதராஜப் பெருமாளின் கொழும்பு வருகையை உறுதிப்படுத்தி பல்

(10ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். - கொழும்பு இடையே பயணிகள் விமான சேவை

## வெள்ளிக்கிழமை முதல் விமானப்படை நடத்தும்

யாழ்ப்பாணம், ஜனவரி 20

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையில் பயணிகள் விமான சேவை ஒன்றை ஸ்ரீலங்கா விமானப்படை நடத்தவிருக்கின்றது.

இந்தச் சேவை அனேகமாக நாளை மறுதினம் (வெள்ளிக்கிழமை) முதல் ஆரம்பமாகும் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

விமானப் படையின் ஏற்பாட்டில் விமான சேவை ஆரம்பமாகவிருப்பது பற்றிய உத்தியோகபூர்வ தகவல் நேற்று பலாலி படைத் தலைமையகத்துக்கு கிடைத்ததாக அந்தத் தலைமையக வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.

இந்த விமான சேவையில் பயணம் செய்வோருக்கு டிக்கெட் பதிவு செய்தல் மற்றும் டிக்கெட் வழங்குவதற்காக ஸ்ரீலங்கா விமானப்படையின்

(10ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு புதூரில் கிரனேட் வீச்சுச் சம்பவம்

கொழும்பு, ஜன. 20

மட்டக்களப்பு நகரை அண்டிய புதூரில் நேற்று நண்பகல் 12.45 மணியளவில் இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவத்தில்—இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் ராஸீக் குழுவைச் சேர்ந்த—செல்லத்துரை ரவி என்பவர் படுகாயமடைந்தார்.

கிரனேட்டை வீசிய இளைஞரும் இச்சம்பவத்தில் காயமடைந்ததாகவும்—

அவ்வரைப்பொலீஸார் கைது செய்துள்ளதாகவும்— தெரிவிக்கப்படுகிறது.

காயமுற்ற ரவி முன்னர் புளொட், ரெலோ குழுக்களில் இருந்தவர் என்றும்தற்போது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ரவி கருணநாயக்காவை லலித் அணி நீக்கியது!

### எம். பி. பதவியும் பறிபோகும்?

கொழும்பு, ஜன. 20

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்க முன்னணியில் இருந்து வெளியேற்றப் பட்டுள்ளார் என்று அம்முன்னணியின் தலைவி சிறிமானி அத்துலத்முதலி அறிவித்துள்ளார்.

முன்னணியின் விசேட கூட்டம் கடந்த 17 ஆம் திகதி நடந்த சமயம் இது தொடர்பான முடிவுஎடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியில் கால் இழப்பு

காரைநகர், ஜன. 20

காரைநகர் கடலில் அண்மையில் மீன்பிடிக்கச் சென்ற ஐந்து பிள்ளைகளின் தந்தை ஒருவர் மிதிவெடியில் சிக்கி காலை இழந்தார்.

காரைநகரைச் சேர்ந்த கந்தையா தம்பிராசா (40 வயது) என்பவரே பொன்னாலைக் கடற்பரப்பில் மீன்பிடித்துக்கொண்டிருக்கும் போது கடலில் உள்ள பிட்டி ஒன்றில் காலை வைத்தபோது மிதிவெடியில் சிக்கினார். (உ-ரி)

## பெரிய சுறா சிக்கியது

காரைநகர், ஜன. 20

காரைநகர் வேரப்பிட்டிக் கடலில் கடந்த ஞாயிறன்று பிரமாண்டமான சுறா மீன் ஒன்று மீனவரின் வலையில் அகப்பட்டது.

கரைக்குக் கொண்டு வரப்பட்ட இந்தச் சுறாவைப் பல நூற்றுக் கணக்கான மக்கள் சென்று பார்வையிட்டனர்.

சுமார் இருபத்தைந்தடி நீளமான இச் சுறா மீன் மூளாய்ச் சந்தையில் ஏலத்தில் விடப்பட்டபோது இருபதாயிரம் ரூபாவிற்கு விலை போனது.

இச் சுறா மீனின் வயிற்றுக்குள் 15 குட்டிகள் காணப்பட்டன. இவை ஒவ்வொன்றும் இருநூறு ரூபா வீதம் விற்கப்பட்டன. (உ-ரி)

## 580 தேர்தல் வன்முறைகள்

கொழும்பு, ஜன. 20

வடமேல் மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பாக இது வரை 580க்கும் மேற்பட்ட தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன என்று தெரிவிக்கப் படுகின்றது.

இந்தச் சம்பவங்களில் ஒரு

(10ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சி மோதலில் உயிரிழந்த 5 புலிகள்

வவுனியா, ஜன. 20

தென்மராட்சிப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற எதிர்பாராத மோதலில் தமது தரப்பில் ஐந்து பேர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

மேஜர் மணிமாறன் (பொன்னம்பலம் சசிதரன்—யாழ்ப்பாணம்), கப்டன் இன்பன் (சரவணமுத்து ரசிகரன்—யாழ்ப்பாணம்), கப்டன் சிரித்திரன் (சுந்தரலிங்கம் ஜெயசீலன்—யாழ்ப்பாணம்), கப்டன் மிதுனன் (சுந்தரலிங்கம் சுபேந்திரன் — கிளிநொச்சி), கப்டன் ராகுல் (வெள்ளையன் நவரத்தினம்—யாழ்ப்பாணம்) ஆகியோரே உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

## உடுத்துறை கடற்கரையில் மூங்கில் வீடு ஒதுங்கியது!

### பர்மாவிலிருந்து வந்ததாம்?

யாழ்ப்பாணம், ஜன, 20

மூங்கிலால் கட்டப்பட்ட சிறிய வீடு ஒன்று உடுத்துறை கடற்பகுதியில் நேற்று முன்தினம் கரையொதுங்கியுள்ளது.

இரு அறைகளைக்கொண்ட இந்த வீட்டில் பானை—சட்டிகள், மீன்பிடி உபகரணங்கள் ஆகியன காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தத் தகவலைக் கேள்விப்பட்டு அங்கு வந்த படையினர் அந்த வீடு கரையொதுக்கிய பகுதிக்கு மக்களைச் செல்ல விடாது தடுத்தனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

### மன்னாரில் நள்ளிரவில்

## கடத்தல் வியாபாரி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்

வவுனியா, ஜன. 20

மன்னார் உயிலங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 12.30 மணியளவில் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்தார்; மற்றொருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நடந்த இடத்தை மன்னார் நீதிவான் எம். இளஞ்செழியன் நேற்

(10ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரிலிருந்து 50 பேரே தினசரிவெளியேறஅனுமதி

மன்னார், ஜன. 20

மன்னாரில் இருந்து தினமும் ஐம்பது பொதுமக்களை மட்டுமே வெளி மாவட்டங்களுக்கு வெளியேறப் படையினர் அனுமதிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளியேறும் பொதுமக்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் புதிய நடைமுறை ஒன்றை மன்னார்

(10ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா நாகம்மா

சுன்னாகத்தைச் சேர்ந்த செல்லையா நாகம்மா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், தவநாயகி, பேரின்பநாயகி (கனடா), தர்மராசா ( Deelah Communication Colombo – 6 ), ரதிதேவி ஆகியோரின் அன்பு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18 - 01 – 1999 அன்று வவுனியாவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வே. குமார்**

எழுதுமட்டுவாள்.

(சி/6198)

## Dr. செல்லத்துரை யோகநாதன் (F.R.C.P)

தும்பளை பருத்தித்துறையைச் சேர்ந்த Dr. செ. யோகநாதன் (F.R.C.P) 16-1-99 சனிக்கிழமை சிங்கப்பூரில் காலமானார்.

அன்னார் முன்னாள் மந்திகை ஆதார வைத்திய சாலை விசேட வைத்திய நிபுணரும், சிங்கப்பூரில் Consultant Physician ஆகக் கடமை புரிந்தவருமான இவர் காலஞ்சென்ற செல்லத்துரை செல்லம்மா ஆகியோரது அருமைப் புதல்வரும் சிவாஞ்சலி (சிங்கப்பூர்) அவர்களின் அன்புக் கணவரும் சுதாகர்(Medical Student, U. K.), சுரேகா, சுகன்யா ஆகியோரது பாசமிகு தந்தையும் ராதா, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும் தையிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற பேராசிரியர் கார்த்திகேசு சதாசிவம்பிள்ளை, சித்தங்கேணியைச் சேர்ந்த ச. செல்வலட்சுமி (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மருமகனும் அருட்பிரதாசன் (ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்), சிவச்செல்வம் (U. K), பாலகிருஷ்ணன் (கனடா) ஆகியோரது அன்பு மைத்துனரும் நா.விக்னேஸ்வரியின் அன்புச் சிறிய தந்தையாரும் ச. நாகநாதன் (ஜேர்மனி) அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18-1-99 திங்கட்கிழமை சிங்கப்பூரில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**P. அருட்பிரதாசன்**
(மைத்துனர்)

திகிரி ஒழுங்கை,
தும்பளை,
பருத்தித்துறை.

சிங்கப்பூர் விலாசம்:
66, Farrer Road, Floor 03 — 06,
Spanish Village,
SINGAPORE - 268849.
[ Telephone No. 4677358 ]

(62307)

## செல்லப்பா கனகசபை

(தங்கோடை காரைநகர்)
(ஸ்தாபகர், கணேசன் ஸ்ரோர்ஸ்,
சிவகணேசன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்.)

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் இல. 11, கஸ்தூரியார் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா கனகசபை 19. 01. 1999 செவ்வாய்க்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் கிரான்பாஸ் பிரபல வர்த்தகர் அமரர்களான கந்தர் செல்லப்பா-வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகனும், அமரர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா, சிவசுப்பிரமணியம் — சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகனும், அமரர் கமலாதேவி மற்றும் நேசமலர் ஆகியோரின் அன்புக் கணவரும், கணேசன் (மக்கள் வங்கி, குயின்லீ கிளை, மக்கலம் வீதி, கொழும்பு - 10), அமரர் நடேசன். (சிவகணேசன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), சிவநேசன் (கணேசன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), சுந்தரேசன் (கனடா), குமரேசன் (கனடா), யோகேஸ்வரி (கனடா), அருள்நேசன் (சிவகணேசன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சாந்தினி, சரோஜினிதேவி, இந்திராணி, தனஜா (கனடா), கலாரஞ்சனி (கனடா), கதிர்காமநாதன் (கனடா) ஆகியோரின் அன்புமாமனாரும் அமரர் K.S. வேலுப்பிள்ளை (முன்னைநாள் வர்த்தகர், கிரான் பாஸ்) ஆறுமுகம் (ஓய்வுபெற்ற M. L. T), மாணிக்கவாசகர் (இளைப்பாறிய பிரதம லிகிதர், பொலிஸ் திணைக்களம்), சௌந்தராம்பிகை, கமலாதேவி, அமரர் கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி நாகேஸ்வரி வேலுப்பிள்ளை, அமரர் சிவகலை, அமரர் புவனேஸ்வரி, அமரர் வைத்திலிங்கம் (இளைப்பாறிய வானிலை ஆராய்ச்சியாளர்), மகேஸ்வரன் இளைப்பாறிய தபால் அத்தியட்சகர்), ஜெயலட்சுமி, சடாட்சரம் (முன்னாள் கொழும்பு ரேடிங்கம்பனி), கணேசமூர்த்தி, திருமதி இராசமணி முருகேசம்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், சியாமளா, ராகவன், ராகுலன், நிர்மலன், நிரஞ்சன், நிசாந்தினி, சிவசங்கர், கஜானன், சாருஜன், சாதனா, சாம்பவி, வைஷ்ணவி, பைரவி, சிறீதாரணி, சிறீராம் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்நாளை (21-01-1999) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

இல. 11, கஸ்தூரியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(சி-6197)


## ராஜா
யாழ்ப்பாணம்.
24 ஆம் திகதி வரை
**நெப்போலியன், நாசர் தேவயானி, மணிவண்ணன்**
நடித்த
**கிழக்கும் மேற்கும்**
இன்று காட்சிகள்
10-30, 2-30
[சி/6186]



## நாகம்ஸ்
**சினிமா**
**சுன்னாகம்.**
இன்று முதல்
**ரஜனி, மீனா, ரோஜா**
நடித்த
**வீரா**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 10-30. 2-30
(62229)



எமது வீடியோ
CD வெளியீடு!
**பிரசாந்தின்**
© காதல் கவிதை
ஓடியோ CD வெளியீடு!
அளவையூர்
N. K. பத்மநாதனின்
நாதஸ்வரம்
**வீடியோ எக்ஸ்ரீம் மியூசிக்கோணர்**
297, பலாலி வீதி,
பரமேஸ்வாராச் சந்தி,
யாழ்ப்பாணம்.
(62298)


### கட்டடப் புனரமைப்பு பற்றிய

# சபைத் தீர்மானங்களை ஆளுநருக்கு அனுப்புக!

## புளொட் கோருகின்றது

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ் மாநகரசபையில் பழைய கட்டடத்தையும், பொது நூலகக் கட்டடத்தையும் புனரமைப்பது தொடர்பாகத் தம்மால் சமர்ப்பிக்கப் பட்டு – சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட —தீர்மானங்களை வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநரின் பரிசீலனைக்கும் நடவடிக்கைக்குமாக உடன் அனுப்பிவைக்குமாறு —

யாழ். மாநகரசபை உறுப்பினரும் புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான செ. கிருபைராஜா கொழும்பிலுள்ள யாழ். மாநகரசபையின் பிரதி முதல்வர் ந. ரவிராஜை 'பக்ஸ்' செய்தி மூலம் கேட்டுள்ளார்.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யுத்தத்தினால் அழிந்துள்ள யாழ். நவீன சந்தைக் கட்டடத்தைத் திருத்தியமைப்பதற்கு வடக்கு, கிழக்கு மாகாண சபை அவசர நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதுடன், இதற்கான மதிப்பீட்டு அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு மாகாண ஆளுநர் நிர்மாணத் திணைக்களத்திடம் கோரியிருக்கின்றார்.

இச்செய்தி எமக்குப் பெருமகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது போன்று, நூலகக் கட்டடம், யாழ். மாநகர சபைக் கட்டடம் ஆகியவற்றைத் திருத்தியமைப்பது தொடர்பாக சபையின் ஆரம்ப அமர்வுகளின் போது என்னால் முன்வைக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட சபையின் தீர்மானங்களையும் பதில் முதல்வராகிய நீங்கள் ஆளுநரின் பரிசீலனைக்குத் துரிதமாக அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றேன் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5-15)


## Post of Internal Auditor

A long standing private company in Jaffna Town requires a competent and well experienced Internal Auditor to check all the control systems of the company and report direct to the Managing Director.

Retired persons in good health can also apply.

Knowledge of computerised accounting system and stores control system an advantage.

Applications giving bio-data and names of two non related referees should reach the followig address on or before 26-01-1999.

Advertiser,
Box No. 838,
C/o. Uthayan,
361, Kasthuriar Road,
Jaffna.

(C/6195)



# நலிவுற்றோர் நலன் நிதிக்காக

**கொக்குவில் லயன்ஸ் கழகம்**

**ரசிகப் பெருந்தகைகளுக்காக**

தரும்

இவ்வாண்டின் மிகப் பிரமாண்டமான

## திரை இசை நிகழ்ச்சி

## "தேனருவி"

**இடம்:** யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு

**காலம்:** 23-01 99 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணி (புதிய நேரம்)

E. S. P., கல்யாணி கிறீம் ஹவுஸ், வேணி களஞ்சியம், லிங்கன் கிறீம் ஹவுஸ், அம்பிகை களஞ்சியம், சரஸ்வதி கபே, குகன் ஸ்ரோர்ஸ், லிங்கம்ஸ் புடைவையகம், வசந்தம் மருந்தகம், வசந்தா மருந்தகம், சிற்றி மெடிக்கல்ஸ், S. V. M., Dr. P. சொர்ணலிங்கம் (கொக்குவில்), லயன் இ. நடராசா (உரும்பிராய்), **மெடிலான்ட் பார்மஸி** (பிரதான வீதி, சங்கானை., அந்தோனியார் கோவிலடி, மானிப்பாய்.) ஆகிய நிறுவனங்களின் ஆதரவில்

**ஈழத்தின் தலைசிறந்த முன்னணி கலைஞர்களுடன்**
**யாழ். பல்கலைக்கழக பல்துறை சார்ந்த மாணவ கலைஞர்களும்**
இணைந்து வழங்கும்

**"கவிதாலயாஸ்"** இசைக் குழுவின்

## "தேனருவி"

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் **லயன் K. M. பத்மநாதன்**

அன்றைய தினம் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குபவர்
**லயன் P. R. நவரட்ணராஜன்**

நித்தம் நித்தம் உங்கள் செவிகளில் கேட்கும்
புத்தம் புதிய, பழைய திரை இசைப் பாடல்களை
**நேரிலே கேட்டு மகிழுங்கள்.**

**விளம்பர அன்பளிப்பு:**

## வெஸ்கோ மருந்தகம்

யாழ்ப்பாணம் — மந்திகை — கல்வியங்காடு — ஊர்காவற்றுறை

(சி/6196)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# ஐ.நா. அமைதிப்படையினர் விரைவில் அங்கோலாவிலிருந்து வெளியேறுவர்

## கோபி அனான் தெரிவிப்பு

வாஷிங்டன், ஜன. 20

அங்கோலாவில் நிலைகொண்டுள்ள ஐ. நா. அமைதிப்படையினர் வாபஸ் பெறப்பட உள்ளனர்.

ஐ. நா. பொதுச் செயலாளர் கோபி அனான் ஐ. நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இதனைத் தெரிவித்தார்.

கடந்த நவம்பர் மாதம் முதல் அங்கோலாவில் அரச படைகளுக்கும் யுனிட்டா கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் சம்பவங்கள் அங்கோலாவில் சமாதான முயற்சிகள் முடிவடைந்து நாடு முழுமையான யுத்த நிலைக்குத் தள்ளப்படுவதையே உணர்த்துகின்றது என்று கோபி அனான் தெரிவித்தார்.

30 வருட கால உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து 1994 ஆம் ஆண்டு லுசாக்கா சமாதான உடன்படிக்கை எட்டப்பட்டது யுனிட்டா. கிளர்ச்சியாளர்கள் இந்த ஒப்பந்தத்தை மதித்துச் செயற்படாமையாலேயே அங்கோலாவில் யுத்த நிலைமைகள் தோன்றக் காரணமாகும். மேலும் ஐ. நா. விமானங்களையும் யுனிட்டாவே தாக்கியுள்ளது.

இவ்வாறான சம்பவங்களின் மத்தியில் ஐ. நா. தனது பணிகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. இப்படி கோபி அனான் மேலும் கூறினார்.

அங்கோலாவில் நிலைகொண்டுள்ள ஆயிரம் ஐ.நா. அமைதிப் படையினரும் எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன் திருப்பி அழைக்கப்பட உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (இ-க)

## யெல்ட்ஸின் சுகவீனம்

மொஸ்கோ, ஜன. 20

ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்ஸின் மீண்டும் உடல் நலக் குறைவு காரணமாக மொஸ்கோ மத்திய மருத்துவ மனையில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இரத்தக் கசிவுள்ள வயிற்றுப் புண்ணினால் பாதிக்கப்பட்டே யெல்ட்ஸின் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

யெல்ட்ஸினைச் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தாமல் மாத்திரைகளினால் குணமாக்க முடியும் எனவும்—

இரண்டு அல்லது மூன்று வாரங்கள் வைத்தியசாலையில் அவர் சிகிச்சைக்காகத் தங்க வேண்டி இருக்கும் என்றும் —

மூன்று மாதங்கள் வரை அவர் பயணம் எதனையும் மேற்கொள்ள முடியாது எனவும்— வைத்தியர்கள் தெரிவித்தனர்.

சில மாதங்களுக்கு முன் யெல்ட்ஸின் இருதய நோய் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது தெரிந்ததே.

இதேவேளை யெல்ட்ஸினின் அரச கருமங்களை பிரதமர் பிரிமகோவ் மேற்கொண்டு வருகிறார். (இ-த)

**உலக அரங்கில்**

## அல்பேனியர் படுகொலை நேட்டோ ஆராயும்

வாஷிங்ரன், ஜன. 20

கொசோவோவில் அல்பேனிய இன மக்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக பிரஸல்ஸில் நேட்டோ நாடுகள் அவரசமாநாடு ஒன்றைக்கூட்டவுள்ளன.

அல்பேனிய இன மக்கள் பிரச்சினைக்கு சமாதானமான தீர்வுஒன்றைக் காணுமாறு யூகோஸ்லாவியாவை நேட்டோ நிர்ப்பந்தித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணத்தவறும் பட்சத்தில் யூகோஸ்லாவியா மீது இராணுவத் தாக்குதல் நடத்தப்படும் எனவும் நேட்டோ எச்சரிக்கை செய்திருந்தது.

அல்பேனிய இன மக்கள் படுகொலை செய்யப்பட்டதை அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் கண்டித்துள்ளதுடன் சேர்பிய படைகளே இக் கொலைகளுக்குக் காரணம் என்றும் குற்றஞ்சாட்டியிருந்தார்.

பிரஸல்ஸில் நடைபெறவுள்ள நேட்டோ மாநாடு குறித்து அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் மெடலின் ஆல்பிரைட் நேட்டோவின் ஏனைய வெளிநாட்டு அமைச்சர்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

(இ-5)

## கிளின்ரனை நீக்குமாறு செனட்டில் பிரதிநிதிகள் சபை வழக்கறிஞர் கோரிக்கை

வாஷிங்ரன், ஜன. 20

மொனிக்கா லுவின்ஸ்கி விவகாரத்தில் பொய் சொன்ன குற்றத்துக்காக ஜனாதிபதி பதவியிலிருந்து கிளின்ரன் நீக்கப்பட வேண்டும் என அமெரிக்க பிரதிநிதிகள் சபை வழக்கறிஞர்கள் செனட் சபை விசாரணையின் போது தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி செனட் சபையில் சாட்சியம் அளிப்பதற்கு நேரடியாக சமூகமளிக்க வேண்டும் எனவும் இவர்களில் ஒருவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை மொனிக்கா லுவின்ஸ்கி, வேர்ணன், ஜோர்டான், பேர்ட்டி, கியூறி உட்பட பிரதான சாட்சிகளையும் விசாரணைக்காக அழைக்க வேண்டும் என குடியரசுக் கட்சி உறுப்பினர் பில் மக்லெம் தெரிவித்தார்.

சாட்சிகளை அழைத்துக் கொண்டிருப்பது செனட் சபை விசாரணைகளை மேலும் தாமதப் படுத்தும். பிரதிநிதிகள் சபையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளே போதுமானவை. அவற்றின் மூலமே ஜனாதிபதி பில் கிளின்ரன் மீது கண்டனத் தீர்மானத்தை மேற் கொள்ளக் கூடியதான ஆதாரங்கள் உண்டு என்று ஜனநாயக கட்சியின் உறுப்பினர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

(இ-5-10)

## சேர்பியா தாக்குதல்

பிறிஸ்டினா, ஜன. 20

கொசோவோவின் தலைநகர் பிரிஸ்டினாவுக்குத் தெற்கே உள்ள கிராமங்கள் மீது சேர்பியப் படைகள் ஷெல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டுள்ளன.

இதனால் இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் இடம் பெயரத்தொடங்கியுள்ளனர்.

இதேவேளை ஒருங்கிணைந்த செயற்பாட்டின் மூலம் இப்பகுதிகளைச் சுற்றி வளைப்பில் ஈடுபட்ட சேர்பியப் படைகள் மீது அல்பேனியர் மேற் கொண்ட ஷெல் தாக்குதலில் ஐந்து சேர்பியப் படைகள் காயமடைந்ததாகத் தெரிவிக்கப் படுகின்றது. (இ-க)

## ஆயிரம் லிங்கங்களுடன் ஆந்திராவில் ஆலயம்!

சென்னை, ஜன. 20

ஆயிரத்து 256 லிங்கங்களைக் கொண்ட அதிசிறப்பு வாய்ந்த ஆலயம் ஒன்று ஆந்திரத்தின் ஓங்கோல் பகுதியில் அமைக்கப்பட்டு வருகிறது.

இவ்வாலயத்தில் பத்ம வியூக வடிவில் அமைக்கப்பட்டிருக்கும் மேடையில் இந்த லிங்கங்கள் அனைத்தும் ஒன்றாக பிரதிஷ்டை செய்யப்படும். இவ் வியூகத்தில் நுழைந்ததுமே பக்தர் ஒருவர் எல்லா லிங்கங்களையும் ஒரே வரிசையில் தரிசிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பஞ்ச பூதங்களைக் குறிக்கும் வகையில் மேடையின் நடுவே பஞ்சமுக லிங்கம் ஒன்றும் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது. (ஐ-10)

## கிரிக்கெட் அலுவலகம் மீது சிவசேனை தாக்குதல்

### மும்பையில் சம்பவம்

புதுடில்லி, ஜன. 20

மும்பையில் உள்ள இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு அலுவலகம் நேற்றுமுன்தினம் இந்து தேசிய வாதக் கட்சியான சிவசேனையினால் தாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தின் போது அலுவலகப் பொருள்கள் சூறையாடப்பட்டதுடன் அங்கிருந்த அதிகாரிகளும் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

பாகிஸ்தான்கிரிக்கெட்அணி இந்தியா வருவதை எதிர்த்து சிவசேனைக் கட்சியினர் புதுடில்லி கிரிக்கெட் ஆடுகளமான பெரோஷா கோத்லா மைதானத்தை சேதப்படுத்தியதை அடுத்து ரெஸ்ட் போட்டிகள் சென்னைக்கு மாற்றப்பட்டது தெரிந்ததே.

தற்பொழுது சிவசேனைக் கட்சி நடத்திவரும் இத்தகைய தாக்குதல்களை அடுத்து ஆளும் பாரதீய ஜனதாக் கட்சிக்கும் சிவசேனைக் கட்சிக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்படலாம் என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## 30 பலஸ்தீன கைதிகள் விடுதலை

ஜெரூஸலம் ஜன. 20

முப்பது பலஸ்தீனக் கைதிகளை விடுதலை செய்ய இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளது.

ரம்ழான் பண்டிகையை முன்னிட்டே இந்தக் கைதிகள் விடுதலை செய்ப்படுவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. (இ-க)

## சுட்டுக்கொலை

பாகிஸ்தானின் ஓவியப் பேராசிரியரும் அவரது 24 வயதுடைய மகளும் நேற்று முன்தினம் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

அண்மைக்காலமாக பாகிஸ்தானில் வன்முறைச் சம்பவங்கள் தலைவிரித்தாடுவது தெரிந்ததே (இ-க)

## 140 ஆவது வயதில் மரணம்

மஸ்கட், ஜன. 20

உலகில் மிகவும் வயதான பெண் என்ற பெயரை கின்னஸ் புத்தகத்தில் பதித்த சாரா கிளார் (வயது 140) காலமாகி விட்டார்.

ஓமான் நாட்டைச் சேர்ந்த சாரா தனது வாழ்நாளில் மருத்துவமனைக்குச் சென்றதில்லை.

தமக்கு ஏற்படும் நோய்களுக்கு ஆயுர்வேத மருந்துப் பொருள்களையே பயன் படுத்தி வந்தார்.

(இ-க)

## திருநெல்வேலி பகுதியில் திருட்டுகள் அதிகரிப்பு

திருநெல்வேலிப் பகுதியில் கடந்த சில தினங்களாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப் படுகிறது.

நேற்று முன்தினம் நள்ளிரவு திருநெல்வேலி பத்திரகாளி அம்மன் கோயிலடிப் பகுதியில் உள்ள வங்கி ஊழியர் ஒருவரது வீட்டிலும், பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியுள்ள வீடு ஒன்றிலும் பெறுமதிமிக்க பொருள்கள் திருட்டுப் போயுள்ளன.

இதேவேளை— திருநெல்வேலி கிழக்கில் உள்ள கொண்டலடி வைரவர் ஆலயத்துக்கு அண்மையில் நேற்று முன்தினம் மாலை வீடு ஒன்றினுள்ளே புகுந்து திருட முயன்ற இளைஞர் ஒருவர் அப்பகுதி மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு அப்பகுதியில் உள்ள இராணுவ முகாம் ஒன்றில் ஒப்படைக்கப்பட்டார்.

கடந்த வாரம் திருநெல்வேலி மேற்குப் பகுதியில் உள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரின் வீட்டில் சாப்பாடு தருமாறு கேட்டுச் சென்று வீட்டின் உள்புற மேசையில் வைக்கப்பட்டிருந்த கைக்கடிகாரம் ஒன்றைத் திருடிய சிறுவன் அடுத்த சில தினங்களில் அப்பகுதியில் உள்ள வேறொரு வீட்டில் சாப்பாடு கேட்டு வந்தபோது மடக்கிப்பிடிக்கப்பட்டான். கைக்கடிகாரமும் மீட்கப்பட்டது.

(இ-7)

## சனசமூக நிலைய கட்டடத் திறப்பு விழா

கொழும்புத்துறை, ஜன. 20

வட்டுக்கோட்டை முதலி கோயிலடி சனசமூக நிலையத்தின் கட்டடத்திறப்பு விழா நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஈ. பி. டி. பி. யைச் சேர்ந்த வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவர் திரிலோகநாதன் மேற்படி வைபவத்தில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றி புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பார்.

இந் நிலையக் கட்டடம் ஈ. பி. டி. பி. யின் செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவினால் பிரதேச சபைகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட விசேட நிதியில் இருந்து கட்டப்பட்டது. (இ-30)

## பல்கலைக்கழக நூலக கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன 20

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நூலகத்தின் மத்திய பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடத் திறப்புவிழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மற்றும் திருமதி பாலசுந்தரம் பிள்ளை ஆகியோர் இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டு புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பர்.

இந்தப் புதிய இரண்டு மாடிக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டதும் இதுவரை காலமும் நூலகப் பாவனைக்கென இருந்த கட்டடங்களில் உள்ள நூல்கள் யாவும் புதிய இடத்துக்கு மாற்றம் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று இடம்பெறும் புதிய கட்டடத்திறப்பு விழாவில் பல்கலைக்கழக பிரதம நூலகர் மற்றும் உதவி நூலகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நூலக ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொள்வர்.

மேற்படி புதிய கட்டடம் நவீன வசதிகளுடன் கூடியதாக அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(இ-7)

## உரிமம் பெற கோரிக்கை

அரியாலை, ஜன. 20

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பகுதியில் இந்த ஆண்டுக்கான சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிக்கான உரிகளை எதிர்வரும் எப்ரல் மாதம் 1 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். மாநகராட்சி மன்றம் கேட்டுள்ளது. (இ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### ஆங்கிலம்

ஆண்டு 5 - 11 வரை ஆங்கிலம் பயிற்றப்பட்ட ஆசிரியரினால் கற்பிக்கப்படும். ஆரம்பம்: 20 - 01 - 99. தொடர்பு: க. நாகேந்திரம் 34/4, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (62189)

### ENGLISH, MATHS

O/L ஆண்டு 10, புதிய பாடத்திட்டத்துக்கு ஆண்டு 6, 9, G.A.Q. (Spoken English) ஆகியன கற்பிக்கப்படும். ஆசிரியர், B Sc.Cey 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (62241)

### பொருளியல்

'சர்வதேச வர்த்தகம்' நூல் விற்பனையாகிறது. நூலின் ஆசிரியர்: வே. கருணாகரன். (62024)

### தவறிவிட்டது

இராசதுரை தர்சனா என்பவருடைய விசேட அடையாள அட்டையும் (இல. 090909726) பிரிகேட் அனுமதியும் 14. 01. 99 அன்று வதிரிச்சந்திக்கும் அல்வாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நெல்லியடி, பிள்ளையார் விலாசில் ஒப்படைத்து உதவவும். (62273)

லூயிஸ் மன்ரேஸா சிவாஜினி ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (716193926V) இரண்டும் மாம்பழம் சந்திக்கும் யாழ். நகருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இராசம் கொம்யுனிக்கேசன்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (62275)


# பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்தக் கோரிக்கை

## தமிழர் ஆசிரியர் சங்கம் தீர்மானம்

திருகோணமலை, ஜன. 20

பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கு மாதாந்தம் 4 ஆயிரம் ரூபா சம்பளமாக வழங்கப்பட வேண்டும் என்று இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் அரசைக் கோருவதெனத்தீர்மானித்துள்ளது.

இந்தச் சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்திலே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:

தற்போது பட்டதாரி ஆசிரியர்களுக்கும் ஜி. சீ. ஈ. உயர்தர தகைமையுடன் நியமிக்கப்பட்டுள்ள பயிலுநர் ஆசிரியர்களுக்கும் மாதம் இரண்டாயிரத்து 500 ரூபா தான் சம்பளமாக வழங்கப்படுகிறது.

இச்சம்பளம் வழங்கும் விடயத்தில் பட்டதாரிக்குரிய தனித்துவம் கவனிக்கப்படவில்லை என்றும் தற்போது சேவையாற்றிவரும் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்குரிய சம்பளத்தை 1999 ஜனவரி முதல் நான்காயிரம் ரூபாவாக அதிகரிக்க அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்தத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ-5)

## தொழில் வங்கி விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ். செயலகத்தில் இயங்கும் தொழில் வங்கி மீண்டும் புதிய விண்ணப்பங்களைக் கோரவுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் என செயலக தாபனக் கிளை அறிவித்துள்ளது. (இ-7)

## தளபாடங்களுக்கு நிலவும் பற்றாக்குறை நீங்கும்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ்ப்பாணக் கல்விவலயப் பாடசாலைகளில் தளபாடங்களுக்கு நிலவும் பற்றாக்குறை விரைவில் நீக்கப்பட்டு விடும் எனயாழ். வலய கல்விப்பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார்.

யாழ்ப்பாண வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் தற்போது உள்ள தளபாடங்களின் விவரம் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கையின் படி தேவையான தளபாடங்களின் விவரங்கள், பற்றாக்குறை, தேவைக்கு அதிகமாகவுள்ள தளபாடங்களின் விவரங்கள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் மூலம் அட்டவணைப்படுத்தப்பட்டு தம்மிடம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் —

இதன் அடிப்படையில் பாடசாலைகளில் மேலதிகமாகவுள்ள தளபாடங்கள் பெறப்பட்டு பற்றாக்குறை உள்ள பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கோவைகள்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ். செயலகத்தில் உள்ள ஒய்வூதியக் கணிப்புக் கிளையில் 114 கோவைகள் கையிருப்பில் இருப்பதாக ஒய்வூதியக் கணிப்புக் கிளை அறிவித்துள்ளது. (இ-7)

## கைதடியில் வடிசாலை

கைதடிப் பகுதியில் 47 லட்சம் ரூபா செலவில் நவீன வடிசாலை ஒன்றை அமைத்து வருவதாகவும் —

சாவகச்சேரி, பளை, கொடிகாமம் ஆகிய கொத்தணிகள் சேர்ந்து இதனை அமைத்து வருவதாகவும் —

பெப்ரவரி நடுப்பகுதியில் இது இயங்கத் தொடங்கும் எனவும் — பளை பனை தென்னை வள அபிவிருத்திச் சங்க முகாமையாளர் தெரிவித்தார். (இ-5)


## BARATHY

சித்தன்கேணி

எழுதுவினைஞர் ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சை

I. நுண்ணறிவு II. மொழியறிவு

ஆசிரியர்: அ. குமாரவேல் B. A. (Hons)

ஆரம்பம்: இன்று (20-01-99) புதன் மாலை 3-00 மணி.

(62297)



## கரவை சுடர் வி. கழகம்
## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

15 - 01 - 99 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள் பின்வருமாறு.

| | |
|---|---|
| முதலாம் பரிசு | 647 |
| இரண்டாம் பரிசு | 979 |
| மூன்றாம் பரிசு | 1469 |

ஆறுதல் பரிசுகள்

160 1675 104 490 387

மேற்படி பரிசுக்குரிய இலக்கமுடையவர்கள் இராஜகிராம ச. ச. நிலையத்தில் கழகத் தலைவருடன் தொடர்பு கொள்ளவும்.

(62288) - நிர்வாகம்


## புதிய அதிபர்

கொழும்புத்துறை, ஜன. 20

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாசாலையின் புதிய அதிபராக புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய அதிபர் மு. மகேந்திரன் அண்மையில் பதவி ஏற்றார்.

இங்கு கடமையாற்றிய அதிபர் திருமதி பரிமளா அன்னலிங்கம் யாழ். சென். சாள்ஸ் மகாவித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (இ-30)

## கசிப்பு உற்பத்தியை நிறுத்த கோரிக்கை

கைதடி, ஜன. 20

கசிப்பு உற்பத்தியாளர்களை கைதடி இராணுவ முகாமுக்கு அழைத்த முகாம் பொறுப்பதிகாரி கசிப்பு உற்பத்தியை நிறுத்துமாறு அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

இச் சந்திப்பில் கைதடிப் பகுதியிலுள்ள கிராம சேவை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

கசிப்பு அருந்துபவர்கள் ஈரல் கருகி இறக்கிறார்கள். இதற்கு நீங்கள் துணை போகக்கூடாதுஎன்றும் அவர் அறிவுரை வழங்கினார். (இ-5-74)


## பாலர் ஆசிரியராக பயிற்சி

க. பொ. த. சாதாரண தரம் அல்லது மேல் தகைமை — தபாலில் ஆறு மாதங்களில் பயிலலாம்.

பாலர் ஆசிரியர் சங்கம்
20, அச்சக ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(62245)


## கண்ணீர் அஞ்சலி



19 — 01 — 99 இல் சிவபதமடைந்த
கணேசன் ஸ்ரோர்ஸ், சிவகணேசன் ஸ்ரோர்ஸ்,
ராம் சில்க் (யாழ்ப்பாணம்)
நமஸ்கார் இம்பெக்ஸ் (கொழும்பு)
ஆகிய ஸ்தாபனங்களின் ஸ்தாபகர்

அமரர்


### செல்லப்பா கனகசபை

அவர்களின் திடீர் மறைவினால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இதய அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்ளும் அதே வேளை அன்னாரது ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள்
கணேசன் ஸ்ரோர்ஸ், சிவகணேசன் ஸ்ரோர்ஸ்,
ராம் சில்க் (யாழ்ப்பாணம்)
நமஸ்கார் இம்பெக்ஸ் (கொழும்பு)
(62289)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

(20 — 01 — 1999)



தோற்றம் 18 — 03 — 1913

மறைவு 21 — 12 — 1998

அமரர் வைத்திய கலாநிதி

### அ. க. காசிப்பிள்ளை

(விசாலாட்சி சமேத காசி விஸ்வநாத சிவன் தேவஸ்தான தர்மகர்த்தா)

திதி: திருதியை

அன்பே அருளே அறிவுருவே
அரிய கல்வி ஒழுக்கமெலாம்
நன்கே உதவி நமை வளர்த்தாய்
நாளும் நாளும் மறவோமே
இன்பே எழிலே எங்குற்றாய்
எந்தாய் ஏங்க வைத்தனையே
பொன்னம் பலவன் பாத நிழல்
புசலென் றெண்ணிப் போந்தனையோ?

எங்கள் சித்தர் சிவ அப்பா!
எடுத்தே அணைக்க மகிழ்வுடனே
துங்கம் மலியும் மருத்துவத்தைத்
துறையே போகக் கற்றுணர்ந்தீர்
பங்கம் இல்லாப் பெரியோனாய்ப்
பரவும் ராச வைத்தியர்க்கும்
அங்கண் துணையாய் எய்தினையோ
அண்ணல் நன்றுன் திருக்குறிப்பே —

நள்ளென் சோலை வட்டூரில்
நாடி அமர்ந்தே அருள் புரியும்
கொள்ளோலை வாழ் கூத்தனடி
குறித்தே தொழுது வேண்டுகின்றோம்
தள்ளா வயதில் நின் சேவை
தளரா வண்ணம் புரிந்தந்த
வள்ளல் காசிப் பிள்ளைதனை
வாரி அணைக்க சாந்தி யென்றே!

தங்களை அன்புடன் நினைவு கூரும்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்: வைத்திய கலாநிதி அ.க.கா. சுமந்திரன் (மகன்)

(இராச வைத்தியர் அ. க. குமாரசாமி ஞாபகார்த்த வைத்தியசாலை)

சிவன் கோயிலடி,
வட்டு. மேற்கு,
வட்டுக்கோட்டை.
(62293)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனி குறைத்து வழங்கப்படுவதாக
# அரசாங்க அதிபருக்கு முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ். குடாநாட்டில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் பங்கீட்டு அடிப்படையில் தற்போது விநியோகம் செய்யப்பட்டு வரும் சீனி சில இடங்களில் குறைவாக விநியோகிக்கப்படுவதாக யாழ். அரச அதிபருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குடா நாட்டில் சீனிக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை அடுத்து யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினரின் கையிருப்பில் இருந்து சீனியைப் பெற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பங்கீட்டு அடிப்படையில் பொதுமக்களுக்கு விநியோகிக்க யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார்.

இதன்படி இரண்டு கட்டங்களாக ஒரு பங்கீட்டு அட்டைக்கு 4 கிலோ சீனி வீதம் வழங்கப்பட்டது.

இந்த விநியோகத்தின் போதே சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகள் சில பொதுமக்களுக்கு சீனியைக் குறைவாக வழங்கியுள்ளதாக தனக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக கடந்த வார இறுதியில் செயலகத்தில் நடந்த வாராந்த கலந்துரையாடலில் அரச அதிபர் தெரிவித்தார்.

சீனி குறைவாக வழங்கப்பட்டது தொடர்பாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு அறிவிக்குமாறும் அரச அதிபர் மேற்படி கலந்துரையாடலின் போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணித்துள்ளார். (இ-7)

## வலிகாமம் கல்வி வலயத்தின்
## நிர்வாகப் பொறுப்புக்கான ஆளணியினர் நியமனம்

வலிகாமம் தெற்கு, ஜன. 20

முன்னர் உடுவில் கல்விக் கோட்டம் இயங்கிய மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி கட்டடத்தின் ஒரு பகுதியில் தற்போது வலிகாமம் கல்வி வலயம் செயற்பட்டு வருகின்றது.

கல்விப் பணிப்பாளர் வீ. இராசையாவின் நிர்வாகத்தில் கல்விநிர்வாகம், பாடசாலை செயற்பாடுகள், பொது நிர்வாகம் ஆகியவற்றுக்கு பொறுப்பாக திருமதி றெஜினா இருதயநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வி அபிவிருத்தி — 1க்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. கமலநாதனும், கல்வி அபிவிருத்தி — 2க்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் கா. சந்திரபாலனும், திட்டமிடல் பிரிவுக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் வை. சச்சிதானந்தனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் பாடசாலைப் பிரிவுகள் ஒன்று, இரண்டு, மூன்று ஆகியவற்றுக்கு முறையே சி. செல்லையா, அ. தற்பரானந்தன், ஏ. வீ. கணேசலிங்கம் ஆகிய உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சங்கீதத்துறைக்கு பொறுப்பாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. கணபதிப்பிள்ளை நியமனம் பெற்றுள்ளார்.

(ஐ-152)

## யாழ். மாநகர வீதிகளை திருத்தக் கோரிக்கை

### மக்கள் குழு மகஜர்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ். மாநகர சபை எல்லைக்குள்உள்ளசேதமடைந்த வீதிகள் அனைத்தும் உடனடியாகத்திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு யாழ். மாநகரசபை ஆணையாளருக்கு அனுப்பியுள்ள மகஜரில் கோரிக்கைவிடுத்துள்ளது.

அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நகர எல்லைப் பகுதிக்குள் வாகனப் போக்குவரத்து அதிகரித்துக் காணப்படுவதுடன் சைக்கிளில் செல்வோர் எண்ணிக்கையும் பாதசாரிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படும் இந்த வேளையில் வீதிகளின் நிலை மோசமாக இருப்பதால் விபத்துக்களும் நாளாந்தம் அதிகரித்து வருகின்றன.

இந்த விபத்துக்களைத் தவிர்ப்பதற்கும் வீதிகளில் திருப்தியான போக்குவரத்தை மேற்கொள்ளவும் இந்த ஆண்டில் திட்டமிட்டு மாநகர எல்லைக்குள் இருக்கும் அனைத்து வீதிகளையும் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை—

யாழ். மாநகரசபை நவீன சந்தைப் பகுதி சுற்றாடலில் நிலவும் சுகாதாரச் சீர்கேடுகளை அகற்றுவதற்கும் மாநகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

—இப்பகுதியில்சுகாதாரசீர்கேடுகளை இல்லாமல் செய்வதற்கு நிரந்தர மேற்பார்வையாளர்கள் நியமனம்செய்யப்பட்டு நாளாந்தம் இச்சுற்றாடலில் சுத்தத்தை பேணுவதற்கு உரிய ஒழுங்குகளைச் செய்ய வேண்டும்.

இப்படி அந்த மகஜரில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

(ஐ-5-6)

## கல்விப் பூங்கா கட்டடத்துக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜன. 20

சரசாலை மந்தி அம்பாள் மழலைகள் கல்விப்பூங்காவுக்கு நிரந்தர கட்டடத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் ந. இராஜேஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

இளைப்பாறிய அதிபர் க. கோபாலகிருஷ்ணன் இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டார்.

சம்பிரதாய பூர்வமாக நடைபெற்ற இந்நிகழ்வில் சி. சிதம்பரநாதக்குருக்கள், சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய பரிபாலன சபைத்தலைவர் க. சிவசங்கரநாதன் உட்படபலர் உரையாற்றினார்கள்.

(இ-5)

## கிராமசேவகர் இடமாற்றம்

நெடுந்தீவு, ஜன. 20

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடமையாற்றும் ஐந்து கிராம உத்தியோகத்தர்களுக்கு இம்மாதம் 15 ஆம் திகதி முதல் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(இ-111)

# வரட்சி நிவாரணம் வழங்க நடவடிக்கை எதுவும் இல்லை

### விவசாயிகள் ஏமாற்றம்

வலி. தென்மேற்கு, ஜன. 20

வரட்சியினால் நெற்பயிர் அழிந்த விவசாயிகள் நிவாரணம் கோரி விண்ணப்பம் சமர்ப்பித்த போதிலும் இதுவரை நிவாரணத்துக்காக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட விவசாயிகளினால் தெரிவிக்கப்படுகிறது.

வலி. தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 18 விவசாய சம்மேளனங்களும் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளன.

இதற்கிடையில் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு வலி. தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விவசாய சம்மேளனங்களின் தலைவர்கள், செயலாளர்களின் கூட்டம் நடைபெற உள்ளது.

மானிப்பாய் மேற்கு சம்மேளன தலைவர் சி. முதலியாரின் அலுவலகத்தில் நடைபெற உள்ள இந்தக் கூட்டத்தில் விவசாயிகளுக்கு வரட்சி நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்படவுள்ளது.

(இ-185)

## 'ஓஷன் சக்ஷஸ்' கப்பலில் பொருள் ஏற்றும் வேலை

யாழ். குடாநாட்டுக்கு பொருள்களை ஏற்றிச் செல்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டதை அடுத்து 'ஓஷன் சக்ஷஸ்' கப்பலில் நேற்று முதல் பொருள்கள் ஏற்றப்பட இருந்தன.

யாழ்ப்பாணத்துக்குப் பொருள்களை ஏற்றும் வணிகர்கள் சங்கத்தில் பதிவு செய்த வர்த்தகர்களின் பொருள்களே இந்தக் கப்பலில் ஏற்றப்பட உள்ளன.

''ஓசன் சக்ஷஸ்'' கப்பலின் வேகம் வடபகுதிக் கடலில் பயணம் செய்வதற்கு ஏற்றதாக இல்லை என்று கூறி கடற்படையினர் இக் கப்பலுக்கு முன்னர் அனுமதி மறுத்திருந்தனர்.

இதேவேளை—

'சஜிந்த' கப்பலில் சீமெந்துக் கூட்டுத்தாபனத்துக்கான சிமெந்து ஏற்றப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-6)

## வாசகர் திருமுகம்

### மண் அள்ளுவதைத் தடுப்பதில் சகலரும் அக்கறை காட்ட வேண்டும்

நாவற்குழி தொடக்கம் கேரதீவு வரையான பிரதேசம் தென்மராட்சியின் சாவகச்சேரிப் பகுதிக்குத் தெற்காக அமைந்த 15 கி. மீ. நீளமான கடலோர கிராமங்களைக் கொண்ட பிரதேசமாகும். கடலினால் ஒதுக்கப்பட்ட வண்டல் மண்ணுள்ள மண் திடல்களிலேயே ஏறத்தாழ 5000-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடியிருந்து வருகின்றன.

இக்குடியிருப்பை அடுத்து நீண்ட அகன்ற பல்லாயிரம் ஏக்கரைக் கொண்ட வயல் பிரதேசம் நாவற்குழி தொடக்கம் அறுகுவெளி வரை காணப்படுகின்றது. இந்த வயல்கள் யாவும் யாழ். மாவட்டத்திலேயே அதிக விளை திறனைக் கொண்டதும், குடாநாட்டின் அனைத்துப் பாகங்களிலும் வாழ்பவர்களுக்கும் சொந்தமானதாகவுமுள்ளன. இப் பிரதேசத்தில் வாழ்பவர்கள் இந்த வயல்கள் மூலம் கிடைக்கும் வருமானத்தை நம்பியே தமது சீவனோபாயத்தை நடத்தி வருகின்றனர். வேறு வளங்கள் பெரிதாக இந்தப் பகுதியில் இல்லை என்றே குறிப்பிடலாம்.

இக் கரையோர குடியிருப்புப் பிரதேசத்தின் வண்டல் மண் பல ஆண்டு காலமாக இப்பிரதேச மக்களின் தேவைக்கு மட்டுமல்லாமல் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் விற்பனைக்காக நாளாந்தம் எடுத்துச் செல்லப்பட்டு வருகின்றது. கடற்கரையை அண்டிய பகுதியில் தொடர்ந்து மண் அள்ளப்படுவதனால் கடல் நீர் குடியிருப்புகளைத் தாண்டி வயல் நிலப்பகுதியில் புகும் நிலையை அடைந்துள்ளது.

இதற்கு உதாரணமாக அறுகுவெளிப் பகுதியில் 1985 ஆம் ஆண்டு பகுதியில் கேரதீவுவீதிக்குத் தெற்காக 10 ஏக்கர் சதுர பரப்பளவு கொண்ட நிலம் கடல் நீர் உட்புகுந்துள்ளதைக் காட்டலாம். அப் பகுதியில் தொடர்ந்தும் மண் அள்ளப்பட்டால் கடல் நீர் மேலும் உட்புகுந்து வயல் நிலங்களை உவர் நிலங்களாக மாற்றுவதுடன் இப்பகுதியில் மக்கள் குடியிருக்க முடியாத நிலையையும் ஏற்படுத்தி விடும். வேலம்பராய் இராவளைத் தோட்டப்பகுதியிலும் இவ்வாறான நிலையே உருவாகி உள்ளது.

இப் பிரதேசத்தில் உள்ள ஒரு சிலரே இந்த மண் அள்ளுதலில் மும்மரமாக ஈடுபட்டு வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. இவர்களே இப் பிரதேசத்துக்கு வெளியில் இருந்து வருவோரும் போலிக் காரணங்களைக் கூறி மண்ணை ஏற்றிக் கொண்டு சென்று வியாபாரம் செய்வதற்கும் பக்கத்துணையாக உள்ளார்கள். கடலுக்கும், வயலுக்கும் இடையே சில நூறு மீற்றரே அரணாக இருப்பதால் கடல் அரிப்பினைத் தடுப்பதற்கு உதவி அரசாங்க அதிபர், கிராம சேவகர்கள் இதற்குப் பொறுப்பான அரச நிறுவன அமைப்புகள் மற்றும் விவசாய சம்மேளனங்கள்: கிராம அபிவிருத்தி சபைகள், சனசமூக நிலையங்கள் மற்றும் இதில் அக்கறை உள்ள நலன் விரும்பிகள் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் இன்று இதன் பாதிப்பு பெரிதாகத் தெரியாவிட்டாலும் எதிர்காலச் சந்ததியினர் கடல் நீர் புகுவதால் பெரிதும் பாதிக்கப்படலாம்.

இப்பிரதேசத்தில் குடியிருக்கும் ஒவ்வொரு நபரும் மண் அள்ளுவதைத்தடுப்பதில் கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும். இந்தப் பிரச்சினையைத் தமது சொந்தப் பிரச்சினையாக எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த விடயத்தில் மக்கள் கண்ணைமூடிக் கொண்டிருந்தால் நமது அன்றாட வாழ்க்கைக்கு நாமே உலை வைக்கும் செயலாகி விடும்.

மறுவன்புலோ. **இ சதாசிவம்**

### ஏனைய உள்ளூராட்சி சபைகளும் பின்பற்ற வேண்டும்

இறைச்சிக்காக பசுக்களைக் கொல்வதை வலி கிழக்கு பிரதேசசபை தடைசெய்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. அதனை உரிய முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்த தங்களின் பணியும் பாராட்டத்தக்கதே. தாங்கள் குறிப்பிட்டிருப்பது போல் சமயக் காரணங்களுக்காகவும் பொருளாதார நோக்கிலும் பசுவதைஎப்போதோதடை செய்யப்பட்டிருக்க வேண்டிய ஒன்றாகும்.

பால்வளம் பெருகினால் மக்கள் சுகதேகிகளாக வாழ முடியும். விவசாய நோக்கிலும் மாட்டின் பங்களிப்பு அளப்பரியது. முன்னர் வன்னியிலிருந்து மாட்டெரு கொண்டு வரப்பட்டது. தற்போது அந்நிலையில்லை. உள்ளூர் மாடுகளையே எருத்தேவைக்காக நம்பியிருக்க வேண்டி உள்ளது. உரவகைகள் தட்டுப்பாடான காலங்களிலும் உள்ளூர் எருவேவிவசாயிக்குக் கை கொடுத்தது. அது மட்டுமன்றி முற்காலத்தில் உழவுத் தேவைகளுக்கும், வண்டிகளில் பாரம் ஏற்றி இழுக்கவும் மாடுகளே பயன்பட்டன. பின்னர் இயந்திரங்கள் பாவனைக்கு வந்தவுடன் மாடுகளின் முக்கியத்துவம் குறைத்து மதிப்பிடப்பட்டது.

சிறிது காலத்திற்கு முன்னர் மண்எண்ணெய் விலை உச்சத்தில் இருந்தபோதும், உரவகைகள் கிடைக்காத நிலையிலும் விவசாயிகளுக்கு உழவு, பசளை தேவைகளுக்கு கைகொடுத்தவை பசுக்களும் மற்றும் எருதுகளே.

இன்று எம்மவர் சமயவாழ்வையும் நன்றியையும் மறந்து பசுவதையில் ஈடுபட்டுள்ளார்கள். காலம் தாழ்த்தியாவது பசுவதையைத்தடை செய்தவர்களான வலி.கிழக்கு பிரதேச சபையினரும்அப்பிரேரணையைக் கொண்டு வந்த உறுப்பினரும் பெரிதும் பாராட்டுக்கு உரியவர்கள். அவர்களின் முயற்சியை ஏனைய உள்ளூராட்சி சபைகளும் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.

வதிரி. **க. தங்கேஸ்வரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரேமாவின் மறுபிறவி எடுத்ததாக கூறப்படும் சிறுவன் குறித்து ஆய்வு

## சுசரித்தஇல்லம் அழைத்துச்செல்லப்பட்டான்

கொழும்பு, ஜன. 20

பிரேமதாசவின் மறு பிறவி எனக் கூறப்படும் சிறுவன் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டு மறுபிறவி தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பேராசிரியர் கிறன்வில் தர்மவர்த்தன தலைமையிலே இந்தச் சிறுவன் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கண்டி ஹிங்குரான் கெந்த பகுதியைச் சேர்ந்த சம்பத் றுவன் பண்டார விஜேபாகு என்ற இந்த இரண்டு வயதுச் சிறுவனை அவரது வீட்டிலிருந்து கொழும்புக்கு அழைத்து வந்துள்ளனர்.

''முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் சுசரித்த இல்லம் மற்றும் ஆமர் வீதியிலுள்ள பிரேமதாச கொல்லப்பட்ட இடம் ஆகியவை சிறுவனுக்குக் காண்பிக்கப்பட்டன.

ஆமர் வீதியிலுள்ள பிரேமதாச நினைவுத் தூபி அருகே சென்ற இந்தச் சிறுவன் விக்கி... விக்கி அழுததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவரின் மறுபிறவி தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டுள்ள பேராசிரியர் கிறன்வில் தர்மவர்த்தன இது தொடர்பாக கருத்து வெளியிடுகையில் ''முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச மறுபிறவி எடுத்துள்ளதாக கூறப்படும் சிறுவன் தொடர்பாக தொடர்ந்து ஆராய்ச்சிகளை நடத்துவதெனத் தீர்மானித்துள்ளோம்.

இந்தச் சிறுவன் தான்தான் ஜனாதிபதி பிரேமதாச எனக் கூறுவதாகவும் துலா, ஹேமா என்ற பெயர்களை அடிக்கடி சொல்வதாகவும் இந்தச் சிறுவனைப் பார்வையிட்டவர்கள் எம்மிடம் தெரிவித்துள்ளனர்'' என்றார். (இ-5)

## இறைச்சிக்காக பசுமாடுவெட்டுவதை தடுக்கக் கோரிக்கை

சுன்னாகம், ஜன. 20

பசுமாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதைத் தடை செய்யுமாறு வலி. வடக்கு பிரதேச செயலர் பத்தினியம்மா திலகநாயகம் போல் பொதுச் சுகாதாரப் பரிசோதகரைக் கேட்டுள்ளார்.

இப்பகுதியில் பசுமாடுகள் குறைவாகவே உள்ளன.

எனினும் பசுமாடுகளை அதிகளவில் இறைச்சிக்காக வெட்டுகிறார்கள். இதனால் பசுமாடுகள் அருகி விடும் ஆபத்து உள்ளது எனவும்—

இதனைத் தடுக்க நடவடிக்கை எடுப்பது அவசியம் எனவும் — அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ-27)

## பருத்தித்துறை, கைதடி பகுதிகளில் அறுவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 20

பருத்தித்துறை மற்றும் கைதடிப் பகுதிகளைச்சேர்ந்த ஆறு பேர் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று மனித உரிமை ஆணைக்குழு யாழ். கிளை அதிகாரி எஸ். சிறீதரன் தெரிவித்தார்.

இவர்களில் நால்வர் கைது செய்யப்பட்டது குறித்து மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கைதடி மேற்கைச் சேர்ந்தவர்களான மார்க்கண்டு தவேந்திரன் (வயது 32), வேலன் கனகலிங்கம் (வயது 36) ஆகியோரும் ராஜப்பு பீற்றர் கெனமன் (வயது 19 தும்பளை, பருத்தித்துறை), சின்னக்குட்டி செல்வரத்தினம் (வயது 39 நாச்சிமார் கோயிலடி பருத்தித்துறை) ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

சின்னக்குட்டி செல்வரத்தினம் என்பவர் கொழும்பில் இருந்து வந்த குற்றப் புலனாய்வுப் பொலீஸாரினால் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார் என்று ஆணைக்குழுவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

தும்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்தவர்களான அருள்தாசன் முரளிதரன் (வயது 23) மற்றும் பாலசிங்கம் பாலவதனன் (வயது 29) ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு அதிகாரிமேலும் தெரிவித்தார். (இ-5-6)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 — 02 — 1915



உதிர்வு 20 — 01 — 1996

அமரர்

**எமடியூஸ் பிளேவியன்**

ஆண்டுகள் மூன்றாகி விட்டாலும்
ஆறாது உங்கள் துயர்
ஊருக்கு தமை அளித்து
உத்தமராய் வாழவைத்து
ஓயாத உங்கள் நினைவில்
மூவாண்டு போனது பப்பா!
நீங்காத நினைவாக
நிலைத்து நிற்க வைத்துவிட்டு
விண்ணிற்கு எதற்காக
விரைந்து சென்றீர்கள் பப்பா?

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

532, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(62/95)

## ஆலய மண்டபத்துக்கு அடிக்கல்

வலி. தென்மேற்கு, ஜன. 20

நவாலி அட்டகிரி முருகன் தேவஸ்தான புதிய நிர்த்த மண்டபத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் நேற்று முன்தினம் மாலை 2.30 மணியளவில் தர்மகர்த்தா சபைத் தலைவர் ஆசிரியர் த. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

நிர்த்த மண்டபத்துக்கான அடிக்கல் வலி. தென்மேற்கு பிரதேச செயலர் நா. வேதநாயகனால் நடப்பட்டது.

நவாலி அட்டகிரி முருகன் தேவஸ்தான சிவஸ்ரீ கா. துரைச்சாமிக் குருக்களின் விசேட வழிபாட்டைத் தொடர்ந்து நடைபெற்ற இந்த விழாவில் நவாலி வடக்கு கிராம அலுவலர் அ. தனபாலரத்தினம் இரண்டாவது அடிக்கல்லை நட்டார்.

இந்த வைபவத்தில் பிரம்மஸ்ரீ து. சுந்தரமூர்த்திக் குருக்கள், எஸ். செல்லத்துரைக் குருக்கள், கா. தியாகராஜ குருக்கள், வழிபடுவோர் சங்கத்தலைவர் க. விஜயரத்தினம், செயலாளர் எஸ். சிவரூபன், டாக்டர் திருமதி த. சுப்பிரமணியம், தர்மகர்த்தாக்களான பொ. கிருபானந்தன், சு. குலசேகரம், மு. இராசரத்தினம் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ-185)

## நோர்வே எம். பி. கொழும்பு வருகிறார்

கொழும்பு, ஜன. 20

நோர்வே நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் லீவ் லண்டே உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நாளை இலங்கை வருகிறார்.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று இங்குவரும் அவர் இரண்டு நாள்கள் இங்கு தங்கியிருப்பார்.

அவர் அரசியல் தலைவர்கள், தமிழ்க்கட்சிப் பிரமுகர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்துவார் என்றும் —

இலங்கை இனப்பிரச்சினை குறித்தும் இலங்கையில் இடம் பெறும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்வார் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

# சைரன் ஒலி எழுப்பி யாழ். மக்களை ஷெல்லில்இருந்துகாத்தவர்மெண்டிஸ்

## நினைவு நாள் உரையில் கிருபைராஜா

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ்ப்பாண மக்களைப் பை யினரின் விமானக் குண்டு வீச்சிலிருந்தும் ஷெல் வீச்சிலிருந்தும் காப்பாற்றும் முயற்சியில் நகரப் பகுதியில் அபாய ஒலி எழுப்பும் நடவடிக்கையை ஆரம்பித்து வைத்தவர் தளபதி மெண்டிஸ்.

புளொட் யாழ். மாவட்ட அமைப்பாளர் செ. கிருபைராஜா மேற்கண்டவாறு கூறினார்.

புளொட் அமைப்பின் ஆரம்ப கால உறுப்பினராக இருந்து மறைந்த மெண்டிஸ் நினைவு தினத்தை யொட்டி யாழ். சுப்பிரமணியம் பூங்கா வளவினை புளொட் உறுப்பினர்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர்.

சிரமதானத்தில் கலந்து கொண்டவர்கள் மத்தியில் உரையாற்றிய போதே கிருபைராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:—

தமிழ் மக்களின் உரிமைக்காக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துடன் தன்னை இணைத்துக் கொண்டு செயற்பட்டவரில் மெண்டிஸ் (விஜயபாதன்) முதன்மையானவர்.

களப்பிரதேசத்தில் தளபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்டு இனப்பற்றுடனும் விடுதலை உணர்வுடனும் அவர் தீவிரமாகச் செயற்பட்டார்.

யாழ். நகரிலுள்ள கேந்திரப் பகுதிகளிலும் காப்பரண்கள் அமைத்து கோட்டைக்குள்ளிருந்து அன்று ஏவப்பட்ட ஷெல்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக ஷெல்கள் ஏவப்படும் போதெல்லாம் சைரன் ஒலி எழுப்பி அயராது பாடுபட்டார்.

விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்ட சகோதரப் படுகொலைகளிலிருந்து எமது உறுப்பினர்களைப் பாதுகாக்கும் வகையில் நிதானமாகவும் சாதுரியமாகவும் அவர் செயற்பட்டார்.

சுந்தரத்தில் ஆரம்பமான சகோதரப் படுகொலைகள் ஏனைய அமைப்புக்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு அழிவு நடவடிக்கைகள் தொடர்ந்த வேளையில் எமது கழகத்தின் செயற்பாடுகளையும் தடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோது அழிவுகளைத் தவிர்க்கும் நோக்குடன் கழகத்தின் செயற்பாடுகளை தற்காலிகமாக நிறுத்தி கழக உறுப்பினர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கான வழிகளைச் செய்து கொண்டிருந்த வேளையில் படுகொலை செய்யப்பட்டார்.

தன்னுடைய பாதுகாப்பைப் பற்றிச்சிந்திக்காதுசகதோழர்களைப் பாதுகாப்பதற்காக தன்னுடைய உயிரை அர்ப்பணித்தவர் அவர்.

அவருடைய இழப்பு எமது கழகத்துக்கும் விடுதலைப் போராட்டத்துக்கும் பேரிழப்பாகும்.

இப்படி அவர் கூறினார். (இ-5)

## பன்னிரு திருமுறைகள் ஓதுதல்

கைதடி, ஜன. 20

திருமுறைகள் பன்னிரண்டையும் ஓதும் நிகழ்வு கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் கடந்த பொங்கல் நாளன்று ஆரம்பமாகியது.

யாழ். இந்து சமயப் பேரவைச் செயலாளர் திரு. சிவ. சக்திகிரீவன் தலைமையில், சங்கீதபூஷணம், கலாபூஷணம் பேராசிரியர் பி.சந்திரசேகரம் அவர்களின் ஒத்துழைப்புடன், நடராசப் பெருமானுக்கு ஆராதனைகள் நடத்தி இந்த நிகழ்வு தொடங்கப்பட்டது.

திருமுறைகள் பன்னிரண்டும் தொடர்ந்து ஓதப்பெற்று சித்திரை வருடப்பிறப்புக்கு முன்பதாக முற்றுப்பெறும் எனச் செயலாளர் தெரிவித்தார். (அ-74)

## மரநாய் தொல்லை

கொழும்புத்துறை, ஜன. 20

சுண்டுக்குளிப் பகுதியில் மரநாய்களால் கோழிவளர்ப்போர் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். (இ-30)

## வல்லைக் கடலில் மீனவர் மரணம்

வலி. கிழக்கு, ஜன. 20

வல்லை கடற்கரைப் பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் நீரில் மூழ்கி மரணமானதாகத் தெரியவருகிறது.

புத்தூர்ப் பகுதியைச் சேர்ந்த எஸ். சரவணை (வயது 55) என்பவரே இறந்தவர் ஆவார்.

கரையில் இருந்து சற்றுத் தூரம் கடலுக்குள் சென்ற போது கடந்த காலத்தில் ஷெல் விழுந்ததினால் ஏற்பட்ட குழிக்குள் இவர் [illegible] மரணமானதாக நம்பப்படுகிறது. [இ-180]

யாழ். BECON
COLLEGE OF COMMERCE இல்
திருஇருதயக் கல்லூரி முன்பாக
கரவெட்டி.

வகுப்புக்கள் ஆரம்பம்: 23 - 01 - 1999
காலை 9-00 மணி

- G. A. Q. (யாழ். / பேராதனை)
- B. A. Part I & II
- எழுதுவினைஞர் பரீட்சை

பல்கலைக்கழகப் பதிவுகள் எம்மால் செய்து கொடுக்கப்படும்.

- நிர்வாகி

(சி/6190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பாவப்பயிற்சி

இந்தத் தீவினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய இனங்களில் ஒன்றான தமிழினம், சுதந்திரத்தின் வாசனையை அறியாது, மொழி உரிமை இழந்து, தாயகப் பிரதேசங்களில் வாழும் உரிமை இழந்து, அகதிகளாக்கப்பட்டு நாலாபுறமும் சிதறிப் பல்வேறு விதமான அடிமை விலங்குகளைச்சுமந்தபடி வாழ்ந்து வருகிறது —

நாட்டின்ஒவ்வொருபகுதியிலும் தமிழினம் பல்வேறு விதமான சோகக் கதைகளுடன் வாழ்கிறது —

கைது செய்யப்படுதல், காணாமற் போதல், விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டோர் வதியும் இடங்கள் சித்திரவதை முகாம்களாக ஆக்கப்படுதல், ஆண்டுக் கணக்கில் தொடரும் ஊரடங்கு, எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற பயத்துடனும் பீதியுடனும் கூடிய வாழ்வு. இவையே சாதாரண வாழ்வாக மாறிவிட்ட நிலை —

சர்வமதப் பிரார்த்தனையைத்தொடர்ந்து கையளிக்கப்பட்ட மகஜரில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்ப் பிரதேசங்கள் ஒவ்வொன்றிலும் பொதுவானவையும் வெவ்வேறு வகையானவையுமான அவலங்களைத் தமிழ் மக்கள் அனுபவித்து வருவது குறித்தும் அந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது

வடக்கு — கிழக்கில் நடைபெறும் போர் முடிவின்றித் தொடரப்படுவதால் தமிழ் மக்களின் வாழ்க்கை சின்னா பின்னப்பட்டுள்ளது. இழப்புகள், பிரிவுகள், தொழிலின்மை, அடிப்படை வசதிகள், வளங்கள் இல்லாமை என்று, ஏனைய பகுதி மக்களின் சாதாரண — வழமை நிலை — வாழ்க்கையை விட, மிகவும் வேறுபட்டதாகவே தமிழ் மக்களின் வாழ்க்கை மாறிவிட்டது.

குற்றங்களைச் செய்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்படுவது போல —

தமக்குரிய — தமது பிறப்பு — உரிமைகளைக் கேட்டதற்காக, அடிமைகளாக — ஆளப்படுவோராக — வாழ முடியாது என்ற கொள்கையைக் கைக்கொண்டதற்காக —

தமிழ் மக்களுக்கு இந்த நாட்டு அரசுகள் வழங்கிய ''தண்டனைகள்'' இவை என்று கருதுமளவுக்கு அவர்களின் வாழ்க்கை சீரழிந்துள்ளது.

தமிழ் மக்களின் கோரிக்கையும்கொள்கையும் மனித வாழ்வியலில் எந்த வகையிலும் குற்றங்கள் அல்ல என்பதனை சிங்கள அரசியல் தலைவர்களும் சிங்கள மக்களும் கடந்த நாற்பது வருடங்களாக உணர்வதாக இல்லை.

தமிழர்களுக்கும் பிரச்சினைகள் உள்ளன; அவர்கள் மீது பாரபட்சமும் புறக்கணிப்புகளும் அநீதிகளும் மனிதாபிபமானமற்ற முறையில் காலத்துக்குக் காலம் கட்டவிழ்த்துவிடப்பட்டன; அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்; என்று வாயால் கூறிய அரசுத் தலைவர்கள் தானும் நீதியான தீர்வு ஒன்றைக் காண்பதற்காக உண்மையுடன் நேர்மையுடன் செயற்படவில்லை.

இப்போதுள்ளது போல சமாதானம் அமைதி என்று இடைக்கிடை பேசப்பட்ட போதிலும் அவை அவ்வப்போது கரைந்து, கலைந்து போகின்றன. இந்தப் பாவப்பயிற்சிக்கு முடிவே இல்லையா?

# புதிய இரு மாடிக் கட்டடத்தில் நிலை கொள்கின்றது

# யாழ். பல்கலைக்கழக "வித்தியானந்தன் நூலகம்"

"வித்தியானந்தன் நூலகம்'' யாழ். பல்கலைக்கழகத்தின் அறிவுக் கூடமாகும். அது கடந்த இருபத்தைந்து வருடங்களாக வளர்ச்சி பெற்று இன்று (20-01-1999) முதல் புதிதாக அமைக்கப்பட்ட இருமாடிக் கட்டடத்தில் நிலைபெறுகிறது.

பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா ஆண்டினை இந்நூலக விஸ்தரிப்பு மேலும் மெருகூட்டும் ஒரு நிகழ்ச்சியாகும். இந்நூலகம் அறிவுலகத்துக்குக் கிடைத்த பெரும் பேறாகும்.

இந்நூலகத்தின் வளர்ச்சி நிலைக்குக் காரணமான பெரியாணப்பெரிதாகும்.

ஆரம்பத்தில் இருந்த நூற்சேர்க்கை இன்று பல மடங்குகளாக அதிகரித்துள்ளது. பல துறைசார் அறிஞர்களும், அன்பர்களும், நூலக நலன் விரும்பிகளும் பல்லாயிரக்கணக்கான நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளனர். பல தொண்டு நிறுவனங்களும் அரசுகளும் நூல்களையும். நூலகசாதனங்களையும் மனமுவந்து வழங்கியுள்ளன. அவ்வுயர்ந்த உள்ளங்களும், நிறுவனங்களும், அரசுகளும் நன்றியுடன் நினைவு கூரத் தக்கன.

யாழ்ப்பாண வளாகத்தின் வது தலைவரான காலஞ்சென்ற பேராசிரியர் க. கைலாசபதி அவர்களின் கருத்தில் உதித்து, காலஞ்சென்ற பேராசிரியர் சு. வித்தியானந்தனால் கால் கோளிடப்பட்டு அமரர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களால் வடிவம் பெற்று இன்றைய துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையின் முயற்சியால் வளர்ச்சி கண்டு வருகிறது.

1980 இல் அன்றையதுணைவேந்தர் சு. வித்தியானந்தனால் அடிக்கல் நடப்பட்ட இந்நூலகம் அவர் பெயரால்

## பலபடிகளை தாண்டி வளர்ச்சி கண்டுள்ளது

யார்கள் என்றும் நினைவு கூரத் தக்கவர்கள். இதன் வரலாறு அவர்களின் நினைவுகளை மீட்டிப் பார்க்கும்.

1974 ஆம் ஆண்டில் இந்நூலகம் சேர். பொன். இராமநாதன் அவர்களின் அரிய பல நூல்களையும், ஆசியாவிலேயே தலைசிறந்தவற்றுள் ஒன்றாக விளங்கிய வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரியின் ஏறக்குறைய இருபத்தையாயிரம் நூல்களையும், சஞ்சிகைகளையும் அதன் ஆளணிகளையும் உள்வாங்கி ஆரம்பிக்கப்பட்டது.

எம். டூயியின் (M Dewey) தசாம்ச முறைப்படி பகுப்பாக்கம் செய்யப்பட்டு பட்டியலிடப்பட்டிருந்த யாழ்ப்பாணக் கல்லூரி நூல்கள் சிறந்த முறையில் நூலக சேவைகளை வழங்குவதற்கு உதவியாக இருந்தன. இந் நூல்கள் 1983 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரியிடம் மீளளிக்கப்பட்டபோதும், அக் கல்லூரி காலத்தால் செய்த உதவி ஞாலத்தில் கலைப்பீடமாக உருப்பெற்ற பரமேஸ்வராக் கல்லூரியின் கட்டடத்தில் இரண்டு அறைகளிலும், யாழ்ப்பாணக் கல்லூரியின் ஒரு பகுதியில் வட்டுக்கோட்டையில் அமைந்திருந்த விஞ்ஞான பீடத்தின் ஒரு பகுதியிலுமாக, சில நூறு சதுர அடிகள் விஸ்தீரணத்தில் இந்நூலகம் ஆரம்பிக்கப்பட்டது.

அது இன்று பல ஆயிரம் சதுர அடிகள் விஸ்தீரணம் கொண்டதாக, இருமாடிக் கட்டடத்தில் அமைந்துள்ள பிரதான நூலகத்தையும், மருத்துவ பீடத்தில் அமைந்துள்ள மருத்துவ நூலகத்தையும், கைதடி, சித்த மருத்துவ பீடத்தில் அமைந்துள்ள சித்த மருத்துவ நூலகத்தையும், மருதனார்மடம், நுண்கலைப் பீடத்தில் அமைந்துள்ள நுண்கலைப்பீட நூலகத்தையும் கிளை நூலகங்களாகக் கொண்டு வளர்ச்சி கண்டுள்ளது.

இன்று இருமாடிகளுடன் உயர்ந்து நிற்கும் நூலகம் யாழ். வளாகத்தின் முதலா இப்போது 'வித்தியானந்தன் நூலகம்' என அழைக்கப்படுகிறது.

### வழிகாட்டியோர்

நூலகம் கடந்து வந்த பாதையில் பல பெரியார்களின் வழிகாட்டுதலைப் பெற்றுக்கொண்டது. திறமைமிக்க பல உத்தியோகத்தரையும், ஊழியர்களையும் அது பெற்றிருந்தது. ஆர். எஸ்.தம்பையா, பின்னர் நூலகராகக் கடமையேற்ற திரு. சி. முருகவேள் ஆகியோர் இன்றுள்ள உயர் நிலையை நூலகம் அடைவதற்கு ஆரம்பகர்த்தாக்கள் ஆவர். அவர்களின் நிர்வாகத் திறமை, வழி காட்டலின் வெளிப்பாடே இன்றுள்ள நூற்சேர்க்கையின் அளவிற்கும், நூலகசேவையின் தரத்துக்கும் காரணமாகும். இவ்வகையில் அவர்களின் சேவை என்றும் நினைவு கூரப்பட வேண்டியதாகும்.

21 ஆம் நூற்றாண்டை அண்மிக்கும் நிலையில் இந்நூலகம் வெறுமனே நூல்களை மட்டும் பாவனைக்கு உட்படுத்தாமல் நவீன அறிவியற் சாதனங்களையும் வழங்கித் தனது சேவையைப் பல மடங்குகளாக விஸ்தரிக்கக் கூடிய முறையில் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

போட்டோப் பிரதி செய்தல், கணனி மயப்படுத்தல் கட்புல, செவிப்புல சாதனங்களின் பாவனைக்கு வசதி செய்தல் என பல கட்டங்களில் தனது சேவையைப் பன்முகப்படுத்தும் தன்மையதாகவும் அது உள்ளது.

இலங்கைப் பல்கலைக்கழகங்கள் எல்லாவற்றிலும் பார்க்க அண்மைக் காலத்தில் உருவாகிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தின் உள்ளடக்கமும் உருவமும் சிறப்பாகக் கூறத்தக்கது என்பது கல்விமான்கள் அனைவரினதும் ஏகோபித்த முடிவு.

எனினும் —

இந்நூலகம் உயர்கல்விக்கு வேண்டிய தகவல் சாதனங்களை கொண்டிருந்தபோதும் நவீனயுகத்தின் தகவற் தேவைகளை நிறைவு செய்யக்கூடியதாக சீரமைக்க வேண்டிய பெரும் பொறுப்பு இந்நூலகத்துக்கு உண்டு. அவற்றை அடையாளங்கண்டு நிறைவு செய்யும் கடமை பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் மாத்திரமன்றி அதனால் பயன்பெறும் சமூகத்துக்கும் உண்டு.

தகவல் தொழில்நுட்பம நவீனமுறும் யுகத்தில் வாழும் நாம் அதனுடன் இணைந்து வளம்பெற்று வாழ்வதற்காக இந்நூலகத்தின் வளங்களைப் பெருக்கிக் கொள்ள வேண்டியது காலத்தின் தேவை. அதை உணர்ந்து செயற்படுவோம், பயன் பெறுவோம். ★

— அபிமானி

# குடியிருக்காத வீடுகளின் தளபாடங்கள் திருட்டு

சண்டிலிப்பாய், ஜன, 20

முள்ளானை, பெரியவிளான் ஆகிய பகுதிகளில் மக்கள் வசிக்காத வீடுகளின் கதவுகள், ஜன்னல்கள், ஓடுகள் ஆகியவை திட்டமிட்டுத் திருடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத் திருட்டுகள் பற்றித் தம்மிடம் பலர் முறைப்பாடு தெரிவித்துள்ளனர் என்றும்—

அப் பகுதிப் பாதுகாப்புப் படை முகாம் பொறுப்பதிகாரியுடன் தாம் தொடர்பு கொண்டு இது குறித்து முறையிட்டுள்ளதாகவும்— வலி. தென் மேற்கு பிரதேசசபைத் தலைவர் வி. ஏ. ஜோன்சன் தெரிவித்தார். (இ-135)

## கம்பிகளை எடுக்க மின் கம்பங்களை உடைக்கின்றனர்

அரியாலை, ஜன. 20

இலங்கை மின்சார சபையினால் யாழ். முற்றவெளிப் பகுதியில் போடப்பட்டிருக்கும் சேதமடைந்த மின்கம்பங்களில் இருந்து கம்பிகளை சிலர் எடுத்துச் செல்கின்றனர்.

சேதமடைந்த மின்கம்பங்களை அகற்றி மின்சார சபையினர் முற்றவெளிப் பகுதியில் போட்டு வருகின்றனர்.

இந்த மின்கம்பங்களில் உள்ள கம்பிகள் தினமும் உடைத்து எடுக்கப்படுகின்றன. (இ-17)

## உரவகைகள் விநியோகம்

திருநெல்வேலி, ஜன. 20

யாழ். கமநலச் சேவைகள் திணைக்களத்திற்கு மாஹோ கப்பலில் 'ரி டி. எம்', உரம், 'வி1' உரம் ஆகியன வந்து சேர்ந்துள்ளன.

யாழ். மாவட்டத்திலுள்ள கமநல கேந்திர நிலையங்களுக்கு இந்த உர வகைகள் விநியோகம் செய்யப்பட்டு வருவதாக யாழ். கமநல சேவைகள் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை விவசாயிகளுக்குத் தேவைப்படும் முக்கிய உரங்களான யூரியா, அமோனியம் சல்பேற் ஆகிய உரங்கள் கொண்டு வரப்படவில்லை. இதனால் இவற்றிற்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது. (இ-135)

## நாளை

தை 07
வியாழக்கிழமை
திதி: சதுர்த்தி
முன்னிரவு: 7.26 வரை.
நட்சத்திரம்: சதயம்
முற்பகல்: 10.30வரை
சதுர்த்தி விரதம்
சுபநேரம்: 8.05-9.35
ராகுகாலம்: 2.05-3.35
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

'நான்' உடலில்உறைகின்ற ஆன்மா; நான் உடல் அன்று.

சுவாமி விவேகானந்தர்

# குரும்பசிட்டி மக்களை மீள குடியேற அனுமதிக்குக

## கிராம அ. ச. கோரிக்கை

திருநெல்வேலி, ஜன. 20

'குரும்பசிட்டிகிராமமக்கள மீண்டும் அங்கு சென்று குடியேறுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.''

இவ்வாறு ஜனாதிபதியையும் வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநரையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் அண்மையில் நடைபெற்ற குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சங்கத்தலைவர் ஆ, சி. நடராசா தலைமையில் உரும்பிராயிலுள்ள வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

மக்கள் வாழும் இடம், வணக்கஸ்தலம் ஆகியவற்றுக்குச் செல்லும் உரிமை மறுக்கப்படுவது மனித உரிமைகளை மீறும் செயல் என்றே கருதவேண்டியுள்ளது. சொந்தப் பிரதேசத்திலேயே அகதிகளாக தங்கள் பாரம்பரிய வதிவிடங்களை இழந்து இன்னல்படும் மக்களின் துயர் துடைக்கப்பட வேண்டும்.

வீடுகளுக்கு வாடகை கொடுத்தும். குடியிருப்பதற்கு வாடகை வீடுகளைப் பெற முடியாமலும் குரும்பசிட்டி மக்கள் சிரமப்பட்டு வாழ்க்கை நடத்தி வருகின்றார்கள்.

தாங்கள் விவசாயம் செய்து வந்த காணிகளை இழந்து வேறு தொழிலும் செய்ய முடியாது பலர் கஷ்டமடைகின்றனர்.

நீண்டகாலத்துக்கு இந்த நிலை நீடிக்க விடக்கூடாது. மீண்டும் இவர்கள் விரைவில் தங்கள் சொந்த இடங்களில் மீளக்குடியேறுவதற்கு அனுமதி வழங்கப்படாத பட்சத்தில் எமது அதிருப்தியை சாத்வீகமான முறையில் தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்படித் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-135)

## வசந்த நாகபூஷணி கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன. 20

ஏழாலை வசந்தபுரம் களவாவோடை அருள்மிகு ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் ஆலய புனராவர்த்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளி முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு நாளை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இடம்பெறும்.

கும்பாபிஷேகக் கிரியைகளை புன்னாலைக் கட்டுவன் கற்பக விநாயகர் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ தியாக. கெங்காதரக் குருக்கள் நடத்தி வைப்பார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபா வெளியே வரும் பட்சத்தில்
# பேச்சுவார்த்தை ஆரம்பிக்க வாய்ப்பு
### கதிர்காமர் கூறுகிறார்

கொழும்பு- ஜன. 20

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது மறைவிடத்தில் இருந்து வெளிவரும் பட்சத்தில் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கும், சமாதானம் ஏற்படுவதற்கும் சாத்தியம் ஏற்படலாம்.

இப்படி வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவில் இலங்கை அரசாங்கத்தால் நடத்தவென ஒழுங்கு செய்யப்பட்டுள்ள வர்த்தகக் கண்காட்சி குறித்து செய்தியாளர்களுக்கு விளக்கம் அளிக்கும் வகையில் கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாடு ஒன்றை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஒழுங்கு செய்திருந்தார்.

அந்த மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;-

தென்னாபிரிக்கத் தலைவர் நெல்சன் மண்டேலா உட்பட 16 உலக நாடுகளின் தலைவர்கள் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எமக்கு உதவி வழங்க முன் வந்துள்ளனர்,

இவ்வாறு உதவி வழங்க முன் வந்துள்ள நாடுகளில் சில தமது சுயவிளம்பரத்தையும், சுபநல விருப்பத்தையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

ஏனைய நாடுகள் உண்மையாகவே இலங்கையில் அமைதி ஏற்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் முன்வந்துள்ளன.

ஆனாலும் இலங்கை அரசாங்கம் இந்த விடயத்தில் அவசரப்படவிரும்ப வில்லை, நிலைமையைப் பொறுத்திருந்து பார்க்கவே விரும்புகின்றது.

இதேவேளை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது மறைவிடத்தில் இருந்து வெளிப்படுவாரானால் அரசியல் சமாதானத்தீர்வுக்கு வழி ஏற்படலாம். தீவிரவாத இயக்கங்களின் தலைவர்கள் பலர் இவ்வாறு வெளிப்பட்டு அரசியல் தீர்வு ஏற்பட்ட உதாரணங்கள் உலகில் பல இருக்கின்றன.

விடுதலைப்புலிகளுக்கு உதவவேண்டாம் என தாய்லாந்து அரசாங்கத்திடம் நான் வேண்டுகோள் விடுத்துள்ளேன். ஆனால் இதுவரை அவ்விடயம் தொடர்பாக தாய்லாந்து அரசாங்கம் எனக்கு உத்தியோகபூர்வ பதில் எதனையும் தரவில்லை.

இவ்வாறு அமைச்சர் தனது செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

(இந்தச் செய்தியாளர் மாநாடு பற்றிய செய்தியில் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளிவந்தது.)

(இ-7-10)

### மருதங்கேணிப் பகுதியில்
# மீனவ மற்றும் விவசாய குடும்பங்களுக்கு உதவி

செம்பியன்பற்று, ஜன. 20

வடமராட்சி-கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள 360 மீனவ மற்றும் விவசாய குடும்பங்களுக்கு உலக உணவு ஸ்தாபனம் உதவ உள்ளது.

300 மீனவக் குடும்பங்களுக்கு இலவசமாக மீன்பிடி வலைகள் வழங்கப்படும்.

விவசாயக் குடும்பங்களில் 60 குடும்பங்களுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்படும்.

அண்மையில் மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெற்ற விசேட கூட்டம் ஒன்றில் உலக உணவு ஸ்தாபன பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்தனர்.

(இ-36)

# யாழ்ப்பாணக் கல்லூரியில் வரவேற்பு

வலி. தென் மேற்கு, ஜன. 20

கனடாவில் கிறிஸ்தவக் குழந்தைகள் நல நிதியக் களப் பணிப்பாளர் பிரேய்ன் மூசாங்குக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் வரவேற்பு அளித்தனர்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வந்திருந்த மூசாங்கை ''ஒட்லி'' மண்டபத்தில் வைத்து மாணவ முதல்வன் ஆர். குமரேஸ் மாலை அணிவித்துக் கௌரவித்தார்.

தொடர்ந்து மாணவர்கள், ஆசிரியர்கள் முன்னிலையில் கனேடிய களப் பணிப்பாளர் மூசாங் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்.

வரவேற்பு வைபவத்தில் மூசாங் கூறியதாவது:

இன்றைய சூழ்நிலையில் மாணவர்களின் ஜி. சீ. ஈ உயர்தரப் பெறுபேறுகள் மிகத் திறமையானவை. இதனை நான் மனதாரப் பாராட்டுகின்றேன்.

கடந்த வருடம் நான் உங்களது 175 ஆவது ஆண்டு விழாவினையும் நேரில் கண்டு கொண்டேன், உங்களுக்கு உதவவே நாம் வந்துள்ளோம், உங்களுடைய முன்னேற்றத்தை கனேடிய சமூகம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றது என்றார்.

கல்லூரி பிரதி அதிபர் செல்வி எஸ். பி. குலசிங்கம் தலைமையில் இடம்பெற்ற வரவேற்பு வைபவத்தில் வண. ஏ. ஏ. போல், வண. ஜி. நடராஜா, இடைநிலை மேற்பார்வையாளர் என். ஏ விமலேந்திரன் மற்றும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

வரவேற்பு வைபவத்தில் குழு நடனங்களும் மாணவர்களின் பேச்சுக்களும் இடம் பெற்றன.

திருமதி ஜீவா இரட்ண சபாபதியின் கர்நாடக சங்கீதமும் மற்றும் நடனமும் இடம் பெற்றன. (இ-185)

### யாழ். கல்வி வலய பாடசாலைகளில்
# மேலதிகமாக உள்ள ஆசிரியர்கள் வேறு பாடசாலைக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலைகளில் மேலதிகமாகவுள்ள ஆசிரியர்கள் ஆசிரியப் பற்றாக் குறை நிலவும் பகுதிகளுக்கு உடனடியாக இடமாற்றம் செய்யப்படுவர் என யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார்.

ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது தொடர்பாக அமைக்கப்பட்ட விசேட குழுவே இதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுக்கும் எனவும் அவர் கூறினார்.

கடந்த 17 ஆம், 18 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மற்றும் கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரிகளில் இடம்பெற்ற யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய்க் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான விசேட கூட்டத்தில் ஒவ்வொரு பாடசாலைகளிலும் மேலதிகமாகவுள்ள ஆசிரியர்களின் விவரங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை தற்போது ஆசிரியர் சேவையில் உள்ளவர்களின் நிரந்தர முகவரி, கல்வித்தராதரம், உள்ளூர், வெளியூர் சேவை விவரம், வயது, பதவிநிலை என்பன குறித்த விவரங்களும் பெறப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் வெளியிடங்களில் சேவை செய்யாதவர்களில் 45 வயதுக்கு உட்பட்ட பெண் ஆசிரியர்களும் 50 வயதுக்கு உட்பட்ட ஆண் ஆசிரியர்களும் ஆசிரியப்பற்றாக்குறை உள்ள மருதங்கேணி மற்றும் தீவக வலயப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படுவர் எனவும்—

இதன் மூலம் அப்பகுதிகளில் உள்ள ஆசிரியப்பற்றாக் குறையை ஓரளவு நிவர்த்தி செய்துகொள்ள முடியும் எனவும் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார். (இ-7)

### வடமராட்சி கிழக்கில்
# கள்ளுத் தவறணைகள் மீண்டும் திறக்கப்படும்

வடமராட்சி கிழக்கு மாமுனை, செம்பியன்பற்று பகுதிகளில் மூடப்பட்டிருக்கும் கள்ளுத்தவறணைகளை மீளத்திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பச்சிலைப்பள்ளி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க பொது முகாமையாளர் தெரிவித்தார்.

இப்பகுதியில் உள்ள கள்ளுத்தவறணைகள் கடந்தகால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மூடப்பட்டு உள்ளன.

இதனால் சீவல் தொழிலாளர்கள் பாதிப்படைந்துள்ளதுடன் சட்டவிரோத கள் விற்பனையும் கசிப்பு உற்பத்தியும் இப்பிரதேசத்தில் அதிகரித்துள்ளன.

தவறணைகள் இயங்கத் தொடங்கியதும் சட்டவிரோத விற்பனைகள் உடன் தடுத்து நிறுத்தப்படும் என பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

(இ-3[illegible])

# மரண அறிவித்தல்கள்

## சுவாம்பிள்ளை அருளானந்தம்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாம்பிள்ளை அருளானந்தம் அவர்கள் 19 - 01 - 1999 செவ்வாய்க்கிழமை அன்று அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாம்பிள்ளை பாக்கியம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், காலஞ் சென்ற அருளப்பு - ஞானமுத்து தம்பதிகளின் மருமகனும், மரியம்மாவின் அன்புக் கணவரும், போல் குணநாயகம் திரேசா ஞானமணி, கமிலஸ் (ஜேர்மனி), ஜோசப்ஸ்ரனி (ஜேர்மனி), ஞானறஞ்சினி, ஞானலதா (ஜேர்மனி), பவுஸ்ரின் (ஜேர்மனி), ஞானறூபி (கனடா) ஞானசுலோஜனா (ஆசிரியை, யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லலிஸ்பிறேமினி, குணபாலசிங்கம் (பிரதி அதிபர்– சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்), றஞ்சினி (ஜேர்மனி), இந்திரா (ஜேர்மனி), தங்கராசா (ஜேர்மனி), நவஞானம் (ஜேர்மனி), லலிதா (ஜேர்மனி), இராசநாயகம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிலானி, நிசாந்தன், நிசாகரன், சஞ்சீவ், பிருந்துசா, சிரான், மயூரிக்கா, கிரிசாந், நரேஸ், தனுஷன், றெனுஷன், தர்ஷிகா, ஜொய்ஸ்ரன், டிலுசா, லச்சியா, றொஷான், செரான், யூட்சன், ஜெனிசா ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**திரு. செ. குணபாலசிங்கம்,**
(மருமகன்)

இல; 08,
ஆக் லேன்,
உடுவில்.

(62287)

---

திருமதி
## இரட்ணம் கண்ணம்மா

மானிப்பாயைச் சேர்ந்த திருமதி இரட்ணம் கண்ணம்மா 18 - 01 - 1999 அன்று சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் திருநெல்வேலியைச் சேர்ந்தவரான A. சுப்பையா அன் கம்பனியின் முன்னாள் உரிமையாளர் காலஞ்சென்ற திரு. A. M. இரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி உமாராஜராஜேஸ்வரி சிவகுமார் (கொழும்பு), இராஜா மகேந்திரசிங்கம் (இயக்குநர், இராமகிருஷ்ணாலயம், உத்தியோகத்தர் - தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம்), திருமதி சந்திரமௌலீஸ்வரி வாமதேவா (கனடா), இராஜா சத்திஜேந்திரசிங்கம் (திருகோணமலை), இராஜா சண்முகேந்திரசிங்கம் (பேபி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி நாகலட்சுமி, பாலகிருஷ்ணன் (முன்னாள் ஆய்வுகூட உத்தியோகத்தர், மானிப்பாய் இந்துக்கல்லூரி), வாமதேவி (பருத்தித்துறை), தையல்நாயகி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20 - 01 - 99) புதன்கிழமை காலை 10-30 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலிஇராமகிருஷ்ணாலயத்திலிருந்து திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**இ. இராஜாமகேந்திரசிங்கம்**
(மகன்)

இராமகிருஷ்ணாலயம்,
திருநெல்வேலி.

(62294)

---

## எட்வேட் நல்லையா அழகரெட்ணம்

உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற நல்லையா–செல்லம்மா தம்பதிகளின் மகன் எட்வேட் நல்லையா அழகரெட்ணம் 18–01–99 அன்று கொழும்பில் காலமானார். இவர் புஷ்பதேவியின் அன்புக் கணவரும் றொபின் தேவருணாளன் (சுவிஸ்)றோய் தேவதயாளன் (ஜேர்மனி), றேமன் தேவசுதன் (லண்டன்), றெஜி தேவபாலன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிறியா (ஜேர்மனி), அனுஷா (சுவிஷ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் றொசானின் ஆசைப் பேரனும் காலஞ் சென்ற திரு. திருமதி நைற் செல்லத்துரையின் (சங்கானை) மருமகனும், நவரட்னம், காலஞ்சென்ற இராசம்மா கனகரட்ணம் நேசம்மா, அருளம்மா ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
**றோய்** (மகன்)

45/4, சுவிசித்தராம வீதி,
கொழும்பு: 6
தொலைபேசி: 556944.

(சி/6193)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பணிப்பாளர்களை அதிபர் சங்கம் சந்தித்தது

திருநெல்வேலி. ஜன. 20

வடமாகாண அதிபர்கள் சங்கம் யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து வலயங்களின் கல்விப் பணிப்பாளர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி உள்ளது.

ஓய்வுபெற்ற அதிபர்களின் சம்பளம் மற்றும் பாடசாலைகளில் எதிர்நோக்கப்படும் முக்கிய பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தையின் போது ஆராயப்பட்டது.

யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் அலுவலகத்தில் யாழ்ப்பாணம், வடமராட்சி, வலிகாமம், தீவகம், தென்மராட்சி ஆகிய ஐந்து வலயங்களின் கல்விப் பணிப்பாளர்களுடன் இச் சந்திப்பு இடம் பெற்றது.

சங்கத் தலைவர் கே. சந்திரசேகரம், செயலாளர் ஆ. சி. நடராஜா, பொருளாளர் எஸ். சிவனேஸ்வரன் உட்பட சங்கப் பிரதிநிதிகள் எட்டுப்பேர் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர்.

★ சகல பாடசாலைகளினதும் பொருள் கணக்கெடுப்பைச் செய்து முடிப்பதற்கு கால நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

★ பாடசாலைகளிலுள்ள தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும்.

★ பாடசாலை — வலயத் தொடர்புகளை இலகுவாக மேற்கொள்ளுவதற்கு உத்தியோகத்தர் நியமிக்கப்படவேண்டும்.

★ அதிபர்களின் நியமனம் விளம்பரப்படுத்தப்பட்டுச் செய்யப்படவேண்டும்.

★ பாடசாலைகளுக்கு எழுதுவினைஞர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

★ ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் நிதியை மூன்று ஆண்டுகளாகப் பெறாதிருக்கும்மாணவர்களுக்கு அதனை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் ஆகியன உட்பட 15 கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு இப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. (இ-135)

## நிர்வாக உத்தியோகத்தர் சுயவிவரம் திரட்டப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ். குடாநாட்டில் உள்ள 13 பிரதேச செயலர் பிரிவுகளிலும் நிர்வாக உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றுபவர்களின் சுய விவரங்கள் விரைவில் திரட்டப்படவுள்ளன.

யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதனின் விசேட பணிப்பின் பேரிலேயே இந்த விவரங்கள் திரட்டப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நிர்வாக உத்தியோகத்தர்களின் விவரங்களைத் திரட்டுவது தொடர்பான நடவடிக்கைகளை செயலக தாபனக் கிளையினர் மேற் கொண்டுள்ளனர். (இ-7)


மாபெரும்

மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

நல்லூர் வடக்கு சனசமூக நிலைய

66ஆவது ஆண்டு விழாவை

முன்னிட்டு

விநாயகர் விளையாட்டுக் கழகம்

நடத்தும்

7 பேர் கொண்ட 12 பந்து பரிமாற்றங்கள் உடைய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஒன்று இடம்பெற உள்ளது. இப்போட்டியில் பங்கு பற்ற விரும்பும் கழகங்கள் பின்வரும் இடங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ். நகரில்: நல்லி சில்க்ஸ்

நல்லூரில்: விஜேய் ரெக்கோடிங் சென்ரர்

கல்வியன் காட்டில்: விநாயகர் களஞ்சியம்

விண்ணப்பக் கட்டணம் 75/-

விண்ணப்ப முடிவு திகதி 31—01—1999

கழக நிர்வாகத்தினர்.

விளம்பர அன்பளிப்பு:

இளைய தலைமுறையின் இரசனைக்கேற்ற பாடல் பதிவின் உறைவிடம்

"விஜேய் ரெக்கோடிங் சென்ரர்"

539, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (62302)



கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர்
திரு. இரட்னம் ராஜமகேந்திரசிங்கம்
அவர்களின் அன்புத்தாயார்

திருமதி
இரட்னம் கண்ணம்மா

அவர்கள் இறைபதமெய்தியதையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சக ஊழியர்கள்,
தேசிய சேமிப்பு வங்கி,
சுன்னாகம்.

(62303)



கண்ணீர் அஞ்சலி

காரைநகரைப் பிறப்பிடமாகவும்
யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக் கொண்டவரும்
கணேசன் ஸ்ரோர்ஸ், சிவகணேசன் ஸ்ரோரின்
ஸ்தாபகருமான

அமரர் செல்லப்பா கனகசபை

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.

உரிமையாளர்களும், ஊழியர்களும்,

சிமாட்டி,
122, மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்.

மங்கை சில்க்,
யாழ்ப்பாணம்.

(சி/6198)




அராலி தெற்கு திருவருள் மிகு ஸ்ரீசிந்தாமணிப் பிள்ளையார் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர் வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

★ ★ ★

உசன் அருள்மிகு ஸ்ரீ முருகன் கோயிலின் மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூரணை தினம் நடைபெறும். (இ-30)

★ ★ ★

வேலணை தெற்கு பூரணை புட்கலைசமேதஹரிகரபுத்திர ஐயனார் ஆலயபாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று காலை நடைபெறும்.

இதற்கான ஆரம்பகிரியைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. (உ-15)

★ ★ ★

யாழ்ப்பாணம் வண்-வட கிழக்கு அருள்மிகு ஸ்ரீ கொண்டலடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (இ-30)

## நோயாளர் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஜன. 20

கொழும்பில் சிகிச்சை பெற செல்லும் நோயாளர்களை ஏற்றிச் செல்லும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் சேவை நாளை நடைபெறும்.

இக்கப்பலில் செல்வதற்காக பதிவுசெய்து கொண்ட நோயாளர், உதவியாளர்களை அன்றைய தினம் காலை 7 மணிக்கு முன் யாழ். போதனா வைத்தியசாலைக் [illegible] கப்பட்டுள்ளது. (உ-15-139)

# செம்மணி மயானத்தில் மற்றொரு கொட்டகை

யாழ்ப்பாணம் ஜன. 20

செம்மணி மயானத்தில் மழைக் காலத்தில் சடலங்களை நனையாமல் எரிப்பதற்காக மேலும் ஒரு கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஒரு கொட்டகை அமைக்கப்பட்டு சடலங்கள் எரிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபையினாலேயே இந்தகொட்டகைகள் அமைக்கப்பட்டன. (இ-5)

# 11 கிராம சேவையாளரே பதவியை ஏற்றனர்

யாழ்ப்பாணம், ஜன. 20

யாழ். மாவட்டத்தில் புதிதாக நியமனம் செய்யப்பட்ட 20 கிராம சேவை உத்தியோகத்தர்களில் பதினொருபேரே தமது பதவிகளை ஏற்றுள்ளனர்.

மீதி ஒன்பது பேரும் இதுவரை பதவி ஏற்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் சிலர் இடம்பெயர்ந்திருப்பதாகவும் சிலர் வேறு பதவிகளிலிருப்பதாகவும் தெரிய வருகிறது.

புதிதாக பதவியேற்ற பதினொரு கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கும் மூன்று மாத பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

விவசாயத்திணைக்களம், கமநல சேவை திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திணைக்களம் உட்பட பல திணைக்களங்களுக்கு நேரில் சென்று இவர்கள் தமக்குரிய பயிற்சியைப் பெற்றுக் கொண்டனர்.

யாழ். மாவட்டத்தில் 435 கிராம சேவையாளர் பிரிவுகள் இருப்பதுடன் இதில் 60 கிராமசேவையாளர்களின் வெற்றிடங்கள் இது வரையும் நிரப்பப்படாமலிருப்பதால் சில கிராம சேவையாளர்கள் இரு பிரிவுகளைக் கவனித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 20

சாவகச்சேரி, கொக்குவில் பகுதிகளில் இருவர் படையினரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவித்து அவர்களின் உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளனர்.

சுப்பிரமணியம் ஜெயக்குமார் (வயது 24—கொக்குவில் கிழக்கு) என்பவர் கடந்த 17 ஆம் திகதி மாலை 6.30 மணியளவிலும் — சதாசிவம் துளசிதாசன் (வயது 20கிராம்புவில், சாவகச்சேரி) என்ற தொழில் நுட்பக் கல்லூரி மாணவன் அன்று இரவு 8 மணியளவிலும்—

வீடுகளில் வைத்து கைது செய்யப்பட்டனர் என்றுதெரிவிக்கப்பட்டது.

இவர்களது கைதுகள் தொடர்பாக குடும்பத்தினரிடம் படையினரால் றீசீற் வழங்கப்பட்டுள்ளது. (உ-5)

## பரிசளிப்பு விழா

திருநெல்வேலி, ஜன. 20

உரும்பிராயில் இடம்பெயர்ந்து இயங்கிவரும் வசாவிளான் மத்திய மகா வித்தியாலய பரிசளிப்பு விழா எதிர்வரும் 23-ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9,30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ஆ. சி. நடராஜா தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் கலந்து கொள்வார்,

சிறப்பு விருந்தினர்களாக யாழ். அரசாங்க செயலக கணக்காளர் செ. நாகராசா, செஞ்சிலுவைச் சங்க கோப்பாய்ப் பிரிவுத் தலைவர் வைத்திய கலாநிதி வை தியாகராஜா ஆகியோர் கலந்து கொள்வார்கள். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (இ-135)

## பாராட்டுவிழா

கேகாலையில் நடைபெற்ற சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினருக்கான தேசியப் போட்டிகளில் சிறந்த மாவட்டமாக தெரிவான யாழ். மாவட்ட சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரை பாராட்டும் விழா ஒன்று நாளை பிற்பகல் 6-30 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் கலையரங்கில் நடைபெறவிருக்கின்றது.

பல பிரமுகர்களின் பாராட்டுக்களைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (உ-3)

## புளியங்கூடல் கிராம அபிவிருத்திச் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 20

புளியங்கூடல் கிராம அபிவிருத்திச் சங்க புனரமைப்புக் கூட்டம் ஊர்காவற்றுறை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுனேந்திரா சுதாகர் தலைமையில் உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மேற்படி சங்கத்தின் தலைவராக இ. கணேசலிங்கமும் செயலாளராக ஞா. செந்தமிழ்ச் செல்வனும் பொருளாளராக சி. விநாயகமூர்த்தியும் போசகராக மு. விஜயரத்தினமும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-5)

## ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பும்

வலி. தெற்கு, ஜன. 20

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்திபாசாலை ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல்1.30மணிக்கு பாடசாலை திறந்த வெளியரங்கில் அதிபர் க. செல்வக்குமாரன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த விழாவில் யாழ். கல்வித் திணைக்களப் பொறியியலாளர் கு. சிவபாலன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பேருரை நிகழ்த்துவார்.

இளைப்பாறிய அதிபர் மு. அருளையா ஸ்தாபகர் நினைவுரை நிகழ்த்துவார்.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசுகளை திருமதி வசந்திமாலா சிவபாலன் வழங்குவார். (இ-152)

## சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜன. 20

சர்வதேச ஊனமுற்றோர் தின விழாவை முன்னிட்டு யாழ் மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தால் நடத்தப்பட்ட கட்டுரை, வினாவிடைப்போட்டிகளில் பரிசு பெற்றோருக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கும் வைபவம் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு மேற்படி சங்கப் பணிமனையில் நடைபெறவிருக்கின்றது.

சங்கத்தால் நடத்தப்பட்ட வதிவிட தையற் பயிற்சியில் பங்கு பற்றியோருக்கான சான்றிதழ்களும் அன்று வழங்கப்படும். (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜே. வி. பி...

(முதலாம் பக்கத் தொடர்)

செய்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களால் மேற் கொள்ளப்பட்டது என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. (உ-3)


புதிய பிரிவுகள்

ஆரம்பம்: 25 - 01 - 99

★ O/L எடுத்தவர்களுக்கு என தனிப்பிரிவு

★ மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், வேலை செய்வோருக்கான தனிப்பிரிவு.

OXFORD ENGLISH ACADEMY

நெல்லியடியில்:
10. 00 A. M.
(அனுமதியை MATHS CENTRE இல் பெறவும்)

பருத்தித்துறையில்:
ஆலடிப்பிள்ளையார் வீதி, சுப்பர்மடம்
(அனுமதிக்கு முந்துங்கள்)

(62299)


## உடுத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்)

கடந்த வாரம் மூங்கிலால் செய்யப்பட்ட தேர் ஒன்று அப்பகுதியில் கரை ஒதுங்கியது தெரிந்ததே.

கரையொதுங்கிய வீடு பர்மா பகுதியிலிருந்து கடலில் அள்ளுண்டு வந்ததாக இருக்கலாம் என இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-3)


செல்வா
மினி சினிமா
யாழ்ப்பாணம்
இன்று முதல்
சத்தியராஜ், கௌதமி, ரூபினி நடித்த
புதிய வானம்
(சி/ 6200)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி
இன்று முதல்
ராஜ்கிரண், ரேவதி விவேக் நடித்த
தலைமுறை
காட்சிகள்;- 10.30, 2.30
(பழைய நேரம்)
T. P. No. 070–212223
(62228)

WORLD LINK COMMUNICATION
வேல்ட் லிங் கொமியுனிக்கேஷன்
( V. M. K. )
52, DUTCH ROAD, CHAVAKACHCHERI.

இன்று முதல்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க
FAX ( பாக்ஸ் ) தொலைப்பிரதி சேவையை
ஆரம்பிக்கின்றார்கள்.

உங்கள் வெளிநாட்டுக் கடிதங்கள், பாஸ்போட்டுகள், அடையாள அட்டைகள், பிறப்புச் சான்றிதழ்கள் அனைத்தும் உடனுக்கு உடன் அனுப்பி வைக்கப்படும்.

வெளியூர்: Fax No. 0094 - 70 - 212263
உள்ளூர்: Fax No. 070 - 212263
(62277)


## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் அருளப்பு செல்லையா

முன்னாள் புனித ஆரோக்கிய ஆலய பராமரிப்பாளரும் 107/3, கடற்கரை வீதி, ஆரோக்கியநாதர் கோயிலடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவருமான ஆறுமுகம் அருளப்பு செல்லையா காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற திருமதி செல்லையா அக்கினேஸின் அன்புக் கணவரும் நாகம்மாவின் அன்புச் சகோதரனும் அருளானந்தம் (அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கம், புதுக்குடியிருப்பு), அமலதாஸ், அன்ரன் (இந்தியா), காலஞ்சென்ற நவம், சாள்ஸ் (அமெரிக்கா), யோனாஸ் (அமெரிக்கா), இராஜேஸ்வரி (பிரான்ஸ்), சேவியர், பரமேஸ்வரி (பிரான்ஸ்), குலேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தந்தையும் புஸ்பம்மா, லீலா, மேபிள் (கொழும்பு), ஸ்ரெவ்னி (கொழும்பு), சின்னு (அமெரிக்கா), கொன்ஷி (அமெரிக்கா), ஜீவா (பிரான்ஸ்), ஆனந்தி, இலங்கேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கடற்கரை வீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து இன்று (20-01-99) புதன் கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

107/03, கடற்கரை வீதி,
ஆரோக்கியமாதா கோயிலடி,
குருநகர். (62308)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20-01-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## திருட்டுப் பொருள்கள் விற்பனை

நெல்லியடி, ஜன. 20

வல்வெட்டித்துறைப் பகுதியில் ஆள்களில்லாத வீடுகளிலிருந்து திருடர்களினால் கழற்றி எடுக்கப்படும் ஓடுகள் அல்வாய் கொற்றாவத்தை, சமரபாகு பகுதிகளில் விற்பனை செய்யப்பட்டுவருவதாக தெரிவிக்கப் படுகிறது. (இ-109)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

அதிகாரிகள் வாரத்துக்கு மூன்று தடவைகள் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்துக்கு வருகை தருவார்கள் என்றும்—

அங்கு வைத்து டிக்கெட்டுகள் விநியோகிக்கப்படும் என்றும் — தெரிகின்றது.

பயணிகள் யாழ். ரயில் நிலையப் பகுதியில் அல்லது சிங்கள மகாவித்தியாலய மைதானத்தில் இருந்து வ. பி. போ. ச. பஸ்கள் மூலம் பலாலிக்கு அழைத்துச் செல்லப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டிலிருந்து பயணம் செய்வதற்கான பாதுகாப்பு அனுமதி பெறும் நடவடிக்கைகள் வழமை போல் மேற்கொள்ளப்படும் என்றும் கூறப்பட்டது.

விமான சேவை தினசரியும், வாரத்திலும் எத்தனை தடவைகள் நடைபெறும், கட்டணம் எவ்வளவு என்பவை போன்ற விவரங்கள் இன்று தெரியவரும் என எதிர்பார்க்கப்பட்டது. (உ-3)

## ரவி...

(முதலாம் பக்கத் தொடர்)

முன்னணியின் அங்கத்துவம் மற்றும் உபதலைவர் பதவி உட்பட ஏனைய பதவிகளில் இருந்து ரவி கருணநாயக்க நீக்கப்பட்டுள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேநேரம்—

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியல் அங்கத்தவராக நியமனம் பெற்ற ரவி கருணநாயக்கா அவரது கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ள தாகவும்—

இதன் காரணமாக பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் யாப்புப் பிரகாரம் அவர் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்கிறார் என்றும்—

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிப் பொதுச் செயலாளரும் அமைச்சருமான டி.எம். ஜயரத்தின நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு நேற்று அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பை ஆட்சேபித்து ரவி கருணநாயக்கா நீதிமன்றத்துக்குச் செல்லலாம் என்பதும்—

அப்படிச் சென்றால், தீர்ப்பு வரும்வரை அவர் எம்.பி. பதவியில் தொடர்ந்து நீடிக்கலாம் என்பதும் — குறிப்பிடத்தக்கவையாகும். (உ-3-6)

## மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

ராஸீக் குழுவில் இயங்கி வந்தார் என்றும் கூறப்பட்டது,

முன்னர் புளொட்டில் இருந்தஒருவரே கிரனேட்டை வீசியதாகவும்—

தற்சமயம் மட்டக்களப்புக்கு மேற்கே புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நாவற்காட்டில் வசித்து வந்த இவர் பின்னர் புலிகளுடன் இணைந்துகொண்டாரா என்பது தெரியவில்லை எனவும்—

தனிப்பட்ட கோபம் காரணமாக கிரனேட்தாக்குதலில் அவர் ஈடுபட்டாரா என்பதும் தெரியவில்லை எனவும் — மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன. (உ)

# தென்மராட்சிப் பகுதியில் மீன்பிடிக்கத் தடை!

தென்மராட்சி தெற்குப்பகுதிக் கடலேரியில் மீன் பிடிப்பதற்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை முதல் மறு அறிவித்தல் வரை தடைசெய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இதனால் தனங்கிளப்பு, மறவன்புலோ, கோவிலாக் கண்டி, தச்சன்தோப்பு, நாவற்குளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக் கணக்காண மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து அப்பகுதியில் இடம்பெற்று வரும் மோதல்களை அடுத்தே இந்தத் தடை உத்தரவு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# குச்சவெளி கடற்பரப்பில் உயிரிழந்த புலிகள்விவரம்

வவுனியா, ஜன. 20

குச்சவெளி கடற்பரப்பில் கடந்த 12 ஆம் திகதி இடம் பெற்ற கடற்சமரில் தமது தரப்பில் மேலும் மூவர் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்துள்ளனர்.

இந்தச்சமரில் ஐவர் உயிரிழந்ததாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

மேஜர் சுசி (மார்கிரட் மரியநீமா—யாழ்ப்பாணம்), கப்டன் சாகரா (வரதராஜா காந்திமதி— யாழ்ப்பாணம்). லெப்டினன்ட் சிதம்பரசி (யோகேந்திரா ஜெயரஞ்சினி -யாழ்ப்பாணம்) ஆகியோரே உயிரிழந்ததாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

மீசாலைப் பகுதியில் கடந்த 11ஆம் திகதி இடம் பெற்ற மோதல் ஒன்றில் கப்டன் மித்திரன் (சின்னையா சிவ ஜீவன்—யாழ்ப்பாணம்) என்பவரும்—

நேற்று முன்தினம் அம்பகாமம் பகுதியில் இடம் பெற்ற மோதல் ஒன்றில் கொங்கை (கந்தசாமி சந்திரகுமார்— அம்பாறை) என்பவரும்— உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (உ-3-6-2)

## கடத்தல். .

(முதலாம் பக்கத் தொடர்)

றுப் பார்வையிட்ட பின் உயிரிழந்தவரின் சடலத்தை மன்னார் வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்து மன்னார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர், யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து மடுவில் தற்சமயம் வசிக்கும் மொறாயஸ் என இனங் காணப்பட்டுள்ளார்.

நள்ளிரவு வேளை இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்கு சட்டவிரோதமாகப் பொருள்களைக் கடத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்த சமயமே இவர்கள் சுடப்பட்டதாகப் படையினர் நீதிவானிடம் தெரிவித்துள்ளனர். (உ-3)

## மன்னாரிலிருந்து..:

(முதலாம் பக்கத் தொடர்)

படை அதிகாரிகள் கொண்டு வந்துள்ளதாகக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

மன்னார் நகரப் பகுதியில் உள்ளவர்களுக்குக் கடந்த வாரம் படையினர் விசேட அடையாள அட்டைகளை விநியோகித்த பின்னர் புதிய நடைமுறை கொண்டுவரப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## 580 தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்)

வர் கொல்லப்பட்டுள்ளார். இது தவிர நான்கு கொலை முயற்சிச் சம்பவங்களும், தாக்குதல்கள், தீயிட்டுக் கொளுத்துதல் ஆகிய சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

வடமேல் மாகாண சபைத் தேர்தல் வாக்களிப்பு எதிர் வரும் 25 ஆம் திகதி நடைபெற இருப்பது குறிப்பிடத் தக்கது. (உ-6)

## வரதராஜப்பெருமாளின்....

(முதலாம் பக்கத் தொடர்)

வேறு செய்திகளை அடுத்தடுத்து வெகுஜனத்தொடர் புச்சாதனங்களில் வெளியிட்டதையடுத்து, அவரின் வருகையை ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்கு ஈ. பி. ஆர். எல். எவ். தலைமைப்பீடம் தள்ளப்பட்டது.

முதலில் வரதராஜப்பெருமாள் இலங்கைதிரும்பவில்லை என்று அடித்துக்கூறிய சுரேஷ் பிரேமச்சந்திரன் —

இப்போது ''அவர் நாடு திரும்பியுள்ளார். இம் மாத முடிவு வரை தங்கியிருப்பார். இது அவரது தனிப்பட்ட விஜயம். அவர் அரசியலில் ஈடுபடமாட்டார்'' — என்று குத்துக்கரணம் அடிக்கும் பதில் ஒன்றை கொழும்புப் பத்திரிகைக்கு நேற்றுத் தெரிவித்திருக்கிறார்.

வரதராஜப்பெருமாளின் வருகையால் கட்சியில் தமது அதிகாரம் பறிபோகும் என்று சுரேஷ்பிரேமச்சந்திரனும், அவரது சகாக்களும் கருதுவதாகக் கூறப்படுகிறது.

கட்சி தொடர்பாக மக்களிடையே தாம் கட்டி வளர்க்கும் நற்பெயரை வரதராஜப் பெருமாளின் வருகை சீரழித்து விடும் என்று அவர்கள் கருதுவதாகவும் கூறப்படுகிறது.

ஈ. பி. ஆர். எல். எவ். அணியை விட்டுத் தனித்து இயங்குவதாகக் காட்டிக் கொண்டு கிழக்கில் படையினருடன் சேர்ந்து இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் ராஸீக் குழுவினரே வரதராஜப்பெருமாளுக்கு பாதுகாப்பு வழங்குவதாக ஒரு தகவல் தெரிவிக்கிறது.

கொழும்பு தெகிவளையில் சரணங்கார வீதியில் உள்ள வீடு ஒன்றில் தங்கியிருக்கும் வரதராஜப் பெருமாளை கட்சியின் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த — முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான — மூத்த பிரமுகர்கள் சிலர் சந்தித்ததாகவும் கூறப்படுகிறது.

கட்சியில் வரதராஜப் பெருமாளைச் சேர்த்து இயங்குவதற்கு தலைமைப் பீடம் இணங்காவிட்டால் தனித்து ஓரணியாக இயங்குவது குறித்து அவர்கள் ஆராய்ந்ததாகவும் ஒரு தகவல் தெரிவித்தது.

இந்திய அரசின் கறுப்புப் பூனைப் படைகளின் விசேட பாதுகாப்போடு அங்கு தங்கியிருந்த வரதராஜப் பெருமாள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அதிவிசேட பிரமுகர்கள் பயன்படுத்தும் பாதை ஊடாகவே நாட்டுக்குள் நுழைந்ததாகக் கூறப்படுகிறது.

அத்தோடு 1990 முற்பகுதியில் நாட்டை விட்டு வெளியேறும் போது தனித் தமிழீழம் பிரகடனம் செய்த வரதராஜப்பெருமாள் இப்போது எந்தத் தடையும் இன்றி—பிரச்சினையும் இன்றி — நாட்டுக்குள் வர அனுமதிக்கப்பட்டும் இருக்கிறார்.

இவை இந்திய—இலங்கை அரசுகளின் முழு ஆசீர்வாதத்துடன் தான் அவர் கொழும்பு திரும்பி உள்ளார் என்பதை உறுதிப்படுத்துவதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org